காவல் அமைய வி.எ

1059 : 2

ஏமுறு (1)

காக்கும் பெ.எ

1096 : 9

ஏமுறு (2)

வருந்துகின்ற பெ.எ.

1096 : 50

ஏமுறு (3)

மகிழ்கின்ற பெ.எ

1097 : 19

ஏய்ப்ப

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 2, 1239 : 1

ஏயின்

ஏகாரத்தால் பெயர் + வே.உ

775 : 3

ஏயும் (1)

"ஏ" என்ற எழுத்தும் (இது சொல்லின் இறுதியில் வரும் போது பொருளைவேறுபடுத்தும்) பெயர் + எண். உ.

767 : 1, 1,

ஏயும் (2)

" ஏ" என்ற எழுத்தும் (இது முன்னிலைச் சொல்லுக் கேற்ற மெய்யினைக் கொண்டுவரும்) பெயர் + எண்உ

935 : 1.

ஏயொடு

"ஏ" யுடன் பெயர் + வே.உ

609 : 1, 623 : 1.

ஏர்

கண்டார்க்கு இன்பத்தைத் தருவதோர். நிற வேறுபாடு இது வண்ணம் பற்றி வரும் (இளம்). எழுச்சி, அஃது எழுகின்ற நிலைமை என நிகழ் காலமே குறித்து நிற்கும் (நச்சர்) பெயர்

1196 : 2

ஏரும்

காண்க : ஏர் பெயர் + எண்.உ.

1196 : 2

ஏரோர்

உழவர் பெயர்

1026 : 3

ஏவல்

ஏவுதல் தொ.பெ

211 : 4, 225 : 3, 973 : 1, 1120 : 2,

ஏழ் (1)

ஏழ் என்னும் சொல் பெயர்

389 : 1

ஏழ் (2)

ஏழு பெயர்

547 : 1

ஏழ் (3)

ஏழாம் வேற்றுமை ஆ.பெ

566 : 1

ஏழ் (4)

ஏழு (7) பெ.அ

764 : 3, 1006 : 4, 1008 : 8, 1298 : 1, 1339 : 2, 1417 : 2

ஏழன்

ஏழாவதின் (7 ஆவது வேற்றுமை) பெயர் + வே.உ.

182 : 2, 195 : 1, 202 : 1

ஏழினும்

ஏழிலும் (7) பெயர் + வே.உ + மு. உ.

1064 : 4

ஏழு

ஏழு என்னும் எண் (7) பெயர்

4: 3, 26 : 3, 43 : 1, 690 : 3, 1156 : 4

ஏழும் (1)

ஏழும் பெயர் + மு.உ

4 : 3, 26 : 3, 690 : 3

ஏழும் (2)

ஏழாம் வேற்றுமையும் பெயர் + எ. உ

584 : 2

ஏழே

ஏழு ஆகும் பெயர் + அசை

43 : 1

ஏழைமை

அறிவின்மை பெயர்

1223 : 3

ஏற்கும்

பொருந்தும் வி.மு

679 : 1

ஏற்ப

பொருந்துமாறு — வி.எ

1578 : 2

ஏற்பின்

பொருந்தினால் — வி.எ

1614 : 16

ஏற்புடைத்து

பொருந்துவது — கு.வி.மு.

1540 : 1

ஏற்றம் (1)

ஏற்றம் என்னும் சொல் (துணிவு) — பெயர்

821 : 1

ஏற்றம் (2)

மிகுதி — பெயர்

1298 : 2

ஏற்றல்

தக்கதாதல் — தொ.பெ

551 : 2

ஏற்றலும்

ஏற்றுக் கொள்ளலும் — பெயர் + எண். உ

590 : 1

ஏற்றற் கண்ணும்

உயர்த்திக் கூறுமிடத்தும் — பெயர் + வே.உ + எண்.உ

1097 : 2

ஏற்றினை

விலங்கின ஆணை — பெயர் + சா, + வே.உ

1571 : 1

ஏற்று (1)

(செவியேற்று) கேட்டு — வி.எ

1213 : 2

ஏற்று (2)

பெற்று — வி.எ

1334 : 2

ஏற்றை

எற்றை என்னும் சொல் — பெயர்

1552 : 2

ஏற்றையும்

விலங்கின் ஆண் — பெயர் + எண்.உ

1504 : 1

ஏறிய (1)

ஊர்ந்த — பெ.எ

1001 : 1

ஏறிய (2)

மிகுந்த — பெ.எ

1297 : 2

ஏறு

விலங்கின் ஆண் — பெயர்

1504 : 1, 1541 : 2, 1543 : 1

ஏறும்

ஆண் விலங்கும் — பெயர் + எண். உ.

1504 :1

ஏன்

விகுதிகளில் ஒன்று — பெயர்

690 : 3

ஏன

பிற — பெயர்

66 : 1

ஏனது

யாதானும் ஒன்றை (இளம்) மாறாகிய (நச்சர்) — பெயர்

1096 : 12

ஏனம்

பன்றி — பெயர்

1571 : 6

ஏனவை

மற்றவை — பெயர்

257 : 1, 382 : 1

ஏனை

மற்றைய — பெ.எ

12 : 1, 17 : 3, 101 : 2, 173 : 2, 185 : 1, 189 : 5, 246 : 1, 330 : 1, 338 : 1, 347 : 1, 383 : 1, 425 : 1, 514 : 1, 597 : 1, 611 : 1, 616 : 1, 662 : 5, 677 : 1, 717 : 1, 733 : 1, 760 : 2, 996 : 1, 999 : 1, 1140 : 1, 1171 : 1, 1274 : 1, 1345 : 1, 1368 : 1, 1398 : 1.

ஏனைய

மற்றவை — பெயர்

203 : 2, 1096 : 57, 1267 : 2.

ஏனையுவமம்

உள்ளுறை உவமம் அல்லாத மற்ற உவமம் — இ.க.சொ; பெயர்

996 : 1, 999 : 1

ஏனோர் (1)

பிறர் (ஏனைய நிலத்திலுள்ள மக்கள்) பெயர்

971 : 1

ஏனோர் (2)

பிறர் (அரசனோடு கூடியிருப்போர்) பெயர்

976 : 2

ஏனோர் (3)

மக்கள் பெயர்

977 : 3

ஏனோர் (4)

பிறர் (வணிகர், வேளாளர்) பெயர்

981 : 2, 1025 : 3

ஏனோர் (5)

பிறர் (கடவுள் பெண்டிர், மானிடப் பெண்டிர்) பெயர்

1033 : 2

ஏனோர் (6)

பிறர் (வைசியர், வேளாளர்) பெயர்

1586 : 3

ஏனோர் (7)

பிறர் (அடியோர், வினைவலர்) பெயர்

972 : 1

ஏனோர்ப் பக்கம்

வாகைத்திணையின் வகைகளுள் ஒன்று; வணிகர், வேளாளர் ஆகியோரது வாகையைச் சுட்டும் திணை இது இ.க.சொ.

1025 : 3

ஏனோர்க்கு (1)

பிறருக்கு (வைசியருக்கு, வேளாளர்க்கு) பெயர் + வே.உ

1586 : 3

ஏனோர்க்கு (2)

பிறர்க்கு பெயர் + வே.உ

1253 : 1

ஏனோரும்

பிறரும் (அடியோர், வினைவலர்) பெயர் + எ.உ

973 : 1

ஐ (1)

ஐ என்னும் எழுத்து பெயர்

4 : 2, 42 : 1, 56: 2, 62 : 2, 86 : 1, 123 : 1, 159 : 1, 160 : 3,4, 178 : 1, 259 : 2, 284 : 3, 285 : 2, 286 : 1, 289 : 2, 373 : 2, 394 : 1, 607 : 2, 608 : 2, 613 : 1

ஐ (2)

சாரியை இ.சொ.

52 : 1, 116 : 2, 126 : 1, 127 : 1, 737: 2, 738 : 2, 739 : 2, 745 : 1, 1152 : 2

ஐ (3)

அசை இ. சொ.

80 : 2, 115 2 : 2,

ஐ (4)

இரண்டன் உருபு இ. சொ.

109 : 4, 5, 6, 7, 503 : 1, 504 : 1, 511 : 1, 2, 568 : 1, 596 : 2, 731 : 1, 782 : 6, 932 : 2, 989 : 6, 997 : 1, 1010 : 17, 1012 : 1, 1013 : 7, 1020 : 1, 1022 : 3, 6, 10, 15, 1024 : 1, 1029 : 19, 24 , 1039 : 7, 1051 : 13, 1064 : 7, 14, 1065 : 7, 1092 : 2, 1096 : 18, 32, 35, 37, 1097 : 5, 9, 12, 15, 29, 32, 1100 : 6, 8, 12, 27, 1101 : 7, 9, 1122 : 3, 1127 : 2, 1151 : 2, 1159 : 3, 5, 6, 1162 : 1, 1182 : 1, 1183 : 2, 1186 : 1, 1219 : 1, 1245 : 1, 1338 : 2, 1367 : 1, 1429 : 1, 2, 1436 : 3, 1457 : 2, 1571 : 1, 2, 3, 4, 5, 6, 7

ஐ (5)

ஐகாரத்தை இறுதியாக உடைய சொல் ஆ.பெ.

123 : 1

ஐ (6)

இரண்டன் உருபின் பெயர் பெயர்

114 : 1, 549 : 2, 556 : 2, 571 : 1, 573 : 2, 574 : 1, 594 : 1

ஐ (7)

விகுதிகளுள் ஒன்று பெயர்

708 : 3

ஐ (8)

ஐ என்னும் சொல் (வியப்பு) பெயர்

869 : 1

ஐ (9)

ஐந்து எண். பெ.அ.

1025 : 2, 1056 : 2, 1311 : 1, 1313 : 1, 1602 : 3

ஐகாரம்

ஐ என்னும் எழுத்து பெயர்

54 : 1, 138 : 1, 158 : 13, 281 : 1, 650 : 4

ஐகாரமும்

'ஐ' என்னும் எழுத்தும் பெயர் + எண்.உ

650 : 4

ஐஞ்சீர்

ஐந்து செய்யுட்சீர்கள் பெ.அ + பெயர்

1414 : 2

ஐஞ்சீரடியும்

ஐந்து சீர்களைப் பெற்று நடக்கும் நெடிலடி

இ.க.சொ; பெயர் + எ. உ.

1323 : 2

ஐந்தடி

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி கழிநெடிலடி ஆகிய ஐவகைச் செய்யுள் அடிகள். பெ.அ + பெயர்

1501 : 2

ஐந்தடிக்கும்

ஐந்து அடிகளுக்கும் பெ.அ.+ பெயர் + மு.உ

1315 : 2

ஐந்தன்

ஐந்து என்னும் சொல்லின் பெயர் + வே.உ

444 : 1, 449 : 1, 455 : 1, 469 : 1

ஐந்தனும்

ஐந்தாம் வேற்றுமையிலும் பெயர் + வே உ + எண். உ

578 : 1

ஐந்திணை

அகப்பொருளின் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து ஒழுக்கங்கள்

இ.க.சொ.; பெயர்

949 : 2, 1004 : 1, 1041 : 2

ஐந்திணையும்

ஐந்திணையும் பெயர் + மு.உ

1004 : 1

ஐந்து (1)

ஐந்தாகிய பெ.அ

61 : 1, 1300 : 1, 1302 : 1, 1501 : 2, 1529 : 5

ஐந்து (2)

ஐந்து என்னும் சொல் பெயர்

457 : 1

ஐந்து (3)

ஐந்தாம் வேற்றுமை ஆ.பெ

562 : 1

ஐந்து (4)

ஐந்து ஆகிய எண் பெயர்

742 : 2, 1029 : 18, 1248 : 1, 1471 : 1

ஐந்து (5)

ஐந்தாம் மெய்ப்பாடு ஆ.பெ

1214 : 3

ஐந்தும் (1)

ஐந்தும் பெயர் + மு..உ

3 : 3, 44 : 1, 86 : 2, 87 : 2, 867 : 4, 914 : 3, 1263 : 10, 1517 : 2, 1593 : 1

ஐந்தும் (2)

ஐந்து என்னும் சொல்லும் பெயர் + எண். உ.

452 : 1, 463 : 1

ஐந்தும் (3)

ஐந்தாம் வேற்றுமையும் ஆ. பெ. + எண்.உ.

586 : 1

ஐந்தும் (4)

ஐந்தும் (கூறப்பெற்ற) ஐந்தும் பெயர் + எ.உ.

1229 : 1, 1349 : 1

ஐந்தே

ஐந்து ஆகும் பெயர் + எண்.ஏ.

1191 : 2

ஐம்பது

ஐம்பது (50) ஆகிய எண் பெயர்

1421 : 1

ஐம்பால்

ஆண்பால், பெண்பால் ஒன்றன் பால், பலர் பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்கள்

இ.க.சொ. பெயர்

483 : 5, 494 : 1, 648 : 1, 710 : 2, 1593 : 3,

ஐம்பாற்கும்

பார்க்க : ஐம்பால் பெயர் + வே.உ+ மு.உ

710 : 2

ஐம்மை

அழகு பெயர்

840 : 1

ஐயஞ்செய்தல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது தலைவன் தன்னைத் துறந்து விடுவானோ எனத் தலைவி தக்க காரணமின்றியும் சந்தேகப்படுதல்

தொ.பெ. + ஒ.சொ.நீ

1219 : 7

ஐயம்

சந்தேகம் பெயர்

248 : 2, 291 : 1, 507 : 1, 516 : 3, 740 : 1, 753 : 1, 868 : 1, 1043 : 1, 1064 : 37, 1067 : 3, 1187 : 2, 1209 : 9, 1219 : 7, 1608 : 3

ஐயமும்

சந்தேகமும் பெயர் + எ.உ

291 : 1, 868 : 1, 1608 : 3

ஐயர்

முனிவர் பெயர்

1095 : 2, 1096 : 29

ஐயறிவினவே

ஐந்து அறிவை உடையன ஆகும். கு.வி.மு. + அசை

1534 : 1

ஐயின்

ஐ என்னும் எழுத்தின் பெயர் +சா

128 :1

ஐயீராயிரத்தாறைஞ் ஞூற்றொடு

5 x 2000 + 6 x 500 = 13,000 பெயர் + வே.உ

1361 : 2

ஐயும் (1)

ஐ என்னும் எழுத்தும் பெயர் + எ.உ.

184 : 1

ஐயும் (2)

இரண்டன் உருபாகிய ஐயும் பெயர் + எ.உ

57 : 1, 583 : 1, 591 : 1, 595 : 3

ஐயைந்து

இருபத்தைந்து 5 x 5 = 25 பெயர்

1421 : 3

ஐயொடும்

ஐகாரத்தொடும் பெயர் + எண்.உ.

179 : 3

ஐவகையடியும்

காண்க · ஐந்தடி பெயர் + மு.உ.

1311 : 1, 1313 : 1

ஒ

ஒகரம் பெயர்

3:3, 63 : 1, 64 : 2, 87 : 1

ஒக்கும்

பொருந்தும் வி.மு.

133 : 7, 347 : 2, 448 : 1, 452 : 2, 571 : 2, 705 : 2, 1088 : 1, 1404 :1, 1418 : 1

ஒகரத்து

ஒ என்னும் எழுத்து பெயர் + வே.உ

16 : 1

ஒகரம்

ஒ என்னும் குறில் எழுத்து பெயர்

16 : 1, 273 : 1, 293 : 2, 446 : 1, 480 : 2

ஒட்ட

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 4, 1239 : 2

ஒட்டகம்

ஒரு விலங்கினம் பெயர்

1520 : 1, 1555 : 1

ஒட்டிய

பொருந்திய பெ எ

177 : 2, 206 : 2, 1065 : 4, 1146 : 3 ,

ஒட்டின

பொருந்தியவை வி.அ.பெ. + பெ.ப.

1375 : 2

ஒட்டுதற்கு

பொருந்துதற்கு பெயர் + வே.உ

133 : 4

ஒட்டும்

பொருந்தும் (இளம், நச்சர்) வி.மு

ஒட்டி நிற்கும் பெயரும்(சேனா, தெய்வச்)

ஆ. பெ. + எ. உ.

555 : 2

ஒட்டுவழி

பொருந்துமிடம் (இளம், நச்சர்) பெ.எ.தொ

890 : 3

ஒடியாது

தவிர்க்காமல் வி.எ

1097 : 25

ஒடு (1)

மூன்றன் உருபு - உடனிகழ்ச்சி இ. சொ.

10 : 1, 17 : 2, 17 : 3, 29 : 2, 38 : 2, 46 : 1, 61 : 2, 63 : 2, 65 : 1, 67 : 2, 68 : 1, 74 : 1, 79 : 1, 80 : 1, 101 : 3, 102 : 3, 105 : 2, 109 : 2,4,5, 6,7, 111 : 2, 129 : 2, 133 : 1, 7, 138 : 1, 139 : 2, 158 : 12, 162 : 3, 164 : 1, 170 : 2, 172 : 3, 175 : 2, 177 : 1, 178 : 2, 179 : 3, 185 : 1,

193 : 2, 199 : 1, 201 : 1, 202 : 3, 203 : 3, 229 : 1, 233 : 1, 241 : 2, 261 : 1, 270 : 1, 284 : 3, 289 : 3, 294 : 1, 318 : 1, 319 : 1, 327 : 4, 343 : 1, 345 : 1, 347 : 1, 349 : 1, 350 : 1, 366 : 1, 385 : 1, 387 : 2, 418 : 1, 421: 1, 431 : 1, 433 : 4, 434 : 3, 451 : 1, 481 : 3, 484 : 2, 486 : 2, 494 : 3, 504 : 1, 521 : 1, 541 : 7, 559 : 3, 4, 5, 6, 578 : 2, 598 : 4, 600 : 5, 601 : 2, 603 : 1, 605 : 1, 609 : 1, 613 : 2, 623 : 1, 625 : 1, 640 : 2, 3, 641 : 4, 650 : 10, 10, 656 : 1, 658 : 2, 661 : 5, 684 : 1, 685 : 2, 687 : 2, 688 : 2, 689 : 3, 690 : 2,691 : 2, 694 : 2, 699 : 1, 700 : 4, 701 : 2, 706 : 5, 5, 6, 8, 710 : 1, 711 : 2, 712 : 3, 716 : 2,2, 720 : 1, 722 : 1, 723 : 3, 726 : 3, 734 : 1, 1, 735 : 3, 741 : 2, 755 : 2, 760 : 2, 767 : 3, 778 : 1, 780 : 3, 874 : 2,882 : 3, 885 : 2, 909 : 3, 916 : 3, 917 : 1, 921 : 2, 3, 922 : 1, 946 : 2, 958 : 1, 967 : 2, 968 : 2, 976 : 1, 986 : 4, 991 : 5, 20, 1000 : 4, 4, 1001 : 3, 1010 : 13, 1013 : 12, 1018 : 12, 1022 : 9, 1026 : 11, 21, 22, 1029 : 14, 17, 17, 1035 : 1, 2 1037 : 3, 1040 : 20, 1041 : 2, 1056 : 1, 1057 :14, 1064 : 18, 18, 35 , 1065 : 8, 1069 : 57, 1083 : 2, 1088 : 1, 1091 : 1, 1092 : 1, 1096 : 10, 19, 25, 30, 57, 1097 : 11, 26 : 42 , 1216 : 1, 1221 : 6, 1237 : 1, 1247 : 1,1,3, 1252 : 1, 1263 : 13, 1265 : 2, 2, 1266 : 1, 1271 : 1, 1272 : 1, 1324 : 1, 1360 : 1, 1370 : 2, 1378 : 2, 1383 : 1, 1388 : 1, 1, 1389 : 1,1, 1418 : 1,1, 1424 : 3, 1425 : 5, 1432 : 3,4, 1435 : 1, 1438 : 1, 1, 1440 : 1, 1446 : 4, 1449 : 4, 1451 : 1, 1, 1456 : 2, 1465 : 1, 1, 1468 : 3, 1496 : 2, 1501 : 1, 1520 : 1, 1551 : 1, 1552 : 1, 1590 : 4, 1591 : 4, 1593 : 4, 1602 : 4, 1603 : 3, 1604 : 1,4, 1606 : 1, 1608 : 5

ஒடு (2)

மூன்றன் உருபுகளுள் ஒன்று — பெயர்

114 : 1, 133 : 7, 549 : 2, 558 : 2, 577 : 1

ஒடு (3)

எண்ணிடைச் சொல் — இ.சொ

254 : 4, 376 : 1, 542 : 4, 649 : 7, 652 : 7, 689 : 4, 1029 : 35, 1065 : 12, 1096 : 43, 1101 : 13, 1164 : 1, 1185 : 3, 1203 : 1, 1204 : 1, 1210 : 2, 1211 : 2, 1212 : 2, 1214 : 2, 1222 : 3, 1223 : 1, 2, 1228 : 1, 1236 : 2, 1294 : 1, 1361 : 2, 1381 : 2, 1390 : 2, 1412 : 2, 1448 : 2, 1452 : 1, 1454 : 1, 1503 : 4, 1505 : 4, 1529 : 2 , 3, 4, 5, 6, 1601 : 2, 1614 : 23

ஒடு (4)

ஒரு மரவகை — பெயர்

263 : 1, 279 : 1,

ஒடு (5)

மூன்றன் உருபு - ஏதுப் பொருள் — இ. சொ.

990 : 4, 5, 1063 : 3, 1097 : 21, 1123 : 3, 1127 : 3, 1219 : 5

ஒடு (6)

ஏழன் பொருளில் (இளம்) மூன்றன் உருபு (நச்சர்) — இ. சொ.

1035 : 1, 1174 : 5

ஒடு (7)

இரண்டன் பொருளில் — இ. சொ.

1096 : 54

ஒடு (8)

மூன்றன் உருபு - கருவி — இ. சொ.

1445 : 2

ஒடு (9)

ஏழன் பொருளில் — இ. சொ.

1035 : 1, 1451 : 1, 1, 1453 : 1

ஒடுங்க

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1235 : 4, 1239 : 2

ஒடுமரம்

ஒருவகைமரம் — இ.பெ.ஒ.

263 : 1, 279 : 1

ஒடுவயின்

மூன்றன் உருபாகிய ஒடுவினிடத்து. — பெயர் + வே.உ

133 : 7

ஒடுவும்

ஒடு என்னும் எண்ணிடைச் சொல்லும் — பெயர் + எண்.உ.

779 : 1

ஒண்

ஒள்ளிய — பெ. எ. அ.

997 : 4, 1452 : 1

ஒண்மைத்தாகி

விளக்கமுடைத்தாகி — கு.வி.மு

1604 : 4

ஒத்த (1)

ஒரே தன்மையுடைய — பெ.எ

41 : 2, 204 : 1, 1602 : 1,

ஒத்த (2)

பொருந்திய — பெ.எ

101 : 4, 318 : 2, 596 : 3, 1299 : 2, 1614 : 1

ஒத்த (3)

இணையான — பெ.எ

1042 : 3

ஒத்த (4)

தகுந்த — பெ.எ

873 : 3

ஒத்தது

பொருந்திற்று — வி.மு

165 : 6, 194 : 3, 435 : 2

ஒத்தல்

ஒரே தன்மையுடையதாயிருத்தல் — தொ.பெ.

1232 : 1

ஒத்தலின்

ஒத்த தன்மையுடையது ஆகலின் பெயர் + வே.உ

1101 : 11

ஒத்தலும்

ஒத்த தன்மையுடைதாயிருத்தலும் பெயர் + எண்.உ

341 : 2

ஒத்தவை

பொருந்தினவை — வி.அ.பெ.

172 :4, 1378 : 3

ஒத்தன

ஒத்த தன்மையுடையன — வி.மு

25 : 2

ஒத்தாழிசைக்கலி

கலிப்பாவில் ஒரு வகையான இது, தேவரை முன்னிலைக்கண் பராவும் பொருண்மையில் வரும். தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய நான்கு உறுப்புகளை உடையது

இ.க. சொ. பெயர்

1390 : 1, 1391 : 2

ஒத்தாழிசையும்

ஒத்தாழிசைக் கலியின் உறுப்புகளுள் ஒன்று தாழிசை என்றும் கூறலாம் — பெயர் + எ.உ.

1375 : 1,

ஒத்தாழிசையே

காண்க: ஒத்தாழிசை — பெயர் + அசை

1402 : 1

ஒத்து

பொருந்தி — வி.எ

998 : 1, 1240 : 3, 1402 : 1

ஒத்தும்

இசைந்தும் — வி.எ. + எ.உ

1397 : 1

ஒப்ப (1)

ஒரே விதமாக — வி.எ

708 : 4

ஒப்ப (2)

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1235 : 2, 1240 : 1

ஒப்ப (3)

பொருந்துமாறு — வி.எ.

1408 : 2

ஒப்பக்கூறல்

இலக்கிய உத்திகளுள் ஒன்று, அது ஒரு பொருளுக்கு இலக்கணம் கூறும் போது அதன் பகுதிகளுக்கும் அந்த விதி பொருந்துமாறு கூறுதல்

பெயர், ஒ.சொ.நீ

1614 : 9

ஒப்பது

பொருந்துவது — பெயர்

1352 : 1

ஒப்பர்

போல்வர் — வி.மு

1097 : 23

ஒப்பித்து

பொருத்தி — வி.எ.

1501 : 2

ஒப்பில் போலி

ஒப்புமை இல்லாத இடத்து ஒப்புமைச் சொற்பட வருகின்ற 'போலும்' போன்ற சொற்கள்.

பெயர். + ஒ. சொ. நீ.

763 : 1

ஒப்பின் (1)

நிகர்வு, ஒப்புமைப்படுத்தலின், உவமைப்படுத்தலின் — பெயர் + அசை

557 : 1, 2

ஒப்பின் (2)

உவமையின் பெயர் + வே.உ

655 : 5

ஒப்பின் (3)

பொருந்தினால் வி.எ

1316 : 1

ஒப்பினது

பொருத்தத்தின் பெயர் + வே.உ

1222 : 4

ஒப்பினாகிய பெயர் நிலை:

உவமையினால் அமைக்கப்படும் பெயர் (எ.கா) பொன்னானவை) இ.க.சொ

655 : 5

ஒப்பினானும்

உவமைப் பொருண்மையானும் பெயர் + சா. + வே.உ. + எண்.உ.

700 : 3

ஒப்பினும்

நிகர்த்த போதும் வி.எ. + சி.உ

1091 : 1

ஒப்பு (1)

உவமை பெயர்

559 : 6, 6, 763 : 1

ஒப்பு (2)

பொருத்தம பெயர்

601 : 3, 735 : 8

ஒப்பும்

நிகராதலும், ஒப்புமையும் பெயர் + எண்.உ.

1196 : 1

ஒப்புமை (1)

நிகரும் தன்மை, ஒப்புமை பெயர்

1061 : 24, 1219 : 9

ஒப்புமை (2)

ஒப்பீடு பெயர்

1223 : 3

ஒப்புவழியுவத்தல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது பிரிவாற்றாத தலைவி தலைமகனோடு ஒப்புமை கொள்ளத்தக்க வேறு பொருளைப் பார்த்த போது மகிழ்தல் பெயர், ஒ. சொ. நீ.

1219 : 10

ஒப்பொடு

உவமையோடு பெயர் + வே.உ

650 : 10, 706 : 5, 1435 : 1

ஒப்போன்

நிகரானவன் வி.அ.பெ

930 : 1

ஓராஅல்

நீக்குக ஏ.வி.மு.

927 : 1

ஒரீஇ

நீக்கி வி.எ.

885 : 1, 1259 : 1, 1486 : 1

ஒரீஇய

நீக்கிய பெ.எ

981 : 1

ஒரு

ஒன்று பெ.அ

43 : 1, 45 : 1, 180 : 1, 254 : 1, 269 : 1, 270 : 1, 326 : 1, 407 : 1, 526 : 1, 530 : 1, 533 : 1, 536 : 1, 2, 3, 537 : 2, 539 : 1, 559 : 4, 565 : 4, 577 : 1, 588 : 2, 782 : 4, 5, 883 : 1, 2, 906 : 2, 944 : 1, 991 : 6, 13, 1017 : 6 1021 : 4, 1077 : 3, 1084 : 2, 1153 : 1, 1171 : 1, 1292 : 2, 1358 : 1, 1410 : 1, 1413 : 1, 1427 : 1, 1429 : 2, 1430 : 1, 1460 : 1, 1520 : 1, 1608 : 4, 1612 : 7

ஒருங்கு

ஒருசேர இ.சொ

133 : 1, 483 : 7, 522 : 2, 902 : 3, 961 : 2, 1284 : 2

ஒருசிறை

மனத்தால் ஒழுகும் ஒழுக்கம் (இளம்)
காதலர் சந்திக்கும் இடம் (நச்சர்) பெயர்

1084 : 2

ஒருத்தல்

விலங்கில் ஆண் பெயர்

1504 : 1, 1538 : 2

ஒருத்தலும்

ஆண் விலங்கும் பெயர் + எண்.உ.

1504 : 1

ஒருத்திக்கும்

ஒரு பெண்பாலுக்கும் பெயர் + வே.உ + எண்.உ.

667 : 2

ஒருதலை (1)
இடைவிடாது இ.சொ
1049 : 1

ஒருதலை (2)
உறுதியாக இ.சொ
1174 : 1

ஒருதலை மொழிதல்
இலக்கிய உத்திகளுள் ஒன்று, அது வேறோர் இடத்தில் சொல்ல வேண்டியதொன்றைத் தகுந்த காரணம் பற்றி மற்றோரிடத்தில் கூறுதல்
பெயர், ஒ. சொ. நீ
1614 : 9

ஒருதலையண்மை
இலக்கிய உத்திகளுள் ஒன்று. அது குறிப்பிட்ட இலக்கணமொன்றை இவ்வாறுதான் இருத்தல் வேண்டும் என உறுதி செய்யாமல், வேறு வகையாகவும் இருக்கலாம் எனக் கூறுதல்
பெயர், ஒ.சொ.நீ
1614 : 14

ஒரு தான் மண்டிய குறுமை
உழிஞையின் துறைகளுள் ஒன்று முற்றுகையிடப்பட்ட அரசனது உழிஞை வீரன் ஒருவன், தனியனாக வெளிவந்து புறத்தோருடன் போரிடல் இ.க.சொ
1017 : 6

ஒரு நெறிப்பட்டு
(அகமாயினும், புறமாயினும்) ஒரு பொருள் மேல் அமைந்து வி.எ
1460 : 1

ஒருபோகு
கலிப்பாவின் ஒரு வகையாகிய இது கொச்சக வொரு போகு, அம்போதரங்கவொரு போகு என இரு வகைப்படும் இ.க.சொ.பெயர்
1399 : 2, 1407 : 1

ஒருமை (1)
ஒருமை எண் இ.க.சொ., பெயர்
528 : 1, 2, 660 : 2, 663 : 3, 664 : 2, 665 : 4, 670 : 1, 672 : 1, 676 : 2, 695 : 1,701 :1, 704 :1, 706 : 7 945 : 1, 946 : 1

ஒருமை (2)
ஒற்றுமை பெயர்
1061 : 18

ஒருமைக்கு
ஒருமை எண்ணிற்கு பெயர் + வே.உ
528 : 2, 672 : 1, 676 : 2

ஒருமையும்
ஒருமை எண்ணும் பெயர் + எண்.உ
653 : 2, 657 : 2, 658 : 2, 695 : 1, 701 : 1, 704 : 1, 706 : 7

ஒருவர்
உயர்திணை ஒருமை பெயர்
669 : 2, 678 : 1, 692 : 2, 1004 : 2

ஒருவர்க்கும்
ஒருவருக்கும் பெயர் + வே.உ + எண். உ.
708 : 4

ஒருவர் மருங்கின்
ஒருவர் இடத்து பெயர் + வே.உ
692 : 2

ஒருவரும்
ஒரு வீரனும் பெயர் + மு.உ
1022 : 13

ஒருவரை
ஒரு மனிதனை பெயர் + வே.உ
511 : 1

ஒருவழி (1)
ஏகதேசம் பெயர்
565 : 4, 1520 : 1

ஒருவழி (2)
ஓர் இடத்தில் பெ.அ + பெயர்
1429 : 2

ஒருவற்கு
ஒருவனுக்கு பெயர் + வே.உ
1022 : 16

ஒருவற்கும்
உயர்திணை ஒருமைக்கும் பெயர் + வே.உ + எண்.உ.
668 : 2, 670 : 2

ஒருவன்
ஒரு வீரன் பெயர்
1013 : 8, 1022 : 3, 6, 6, 15

ஒருவன் தாங்கிய பெருமை
வஞ்சிப் புறத்துறைகளுள் ஒன்று : வஞ்சிவீரன் ஒருவன் எதிரே வெள்ளம் போல வரும் படையினரைக் கல் போன்று நின்று தடுத்து நிறுத்துகின்ற சிறப்பு இ.க.சொ
1013 : 8

ஒருவனை
காண்க ஒருவன் பெயர் + வே.உ
1022 : 6, 15

ஒரூஉ (1)

நீக்கப்படுகின்ற பெ.எ

1314 : 1, 1321 : 1

ஒரூஉ (2)

ஒரூஉத் தொடை, அஃதாவது இருசீர்கள் இடையிட்டு எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகள் இடம் பெறுதல் இ.க.சொ, பெயர்

1359 :1

ஒரூஉ வண்ணம்

எதுகை முதலிய தொடைகள் எதுவும் அமையாமல் இயல்பாக வரும் செந்தொடைப்பாவோசை (இளம்) ஆற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதொன்றனை அவாவாமை அறுத்துச் செய்வது (பேரா., நச்சர்) இ.க.சொ, பெயர்.

1472 : 8, 1486 : 1

ஒரூஉம்

ஒரூஉத்தொடையும் பெயர் + எண்.உ.

1350 :1

ஒரோவொரு வழியே

சில இடத்து பெ.அ. + எண்.ஏ.

1292 : 2

ஒல்லார்

பகைவா் பெயர்

1026 : 10,13

ஒல்வழி

பொருந்துமிடத்து வி.எ

115 : 2, 247 : 2

ஒவ்வும் (1)

ஒகாரமும் பெயர் + எ.உ.

72 : 1

ஒவ்வும் (2)

ஒ கா எற்று இடைசசொல்லும் பெயர் + எண்.உ.

274 : 1

ஒழித்து (1)

இல்லாமல் செய்து வி.எ

177 : 2, 348 : 3, 351 : 1, 1353 : 1

ஒழித்து (2)

இல்லாது, தவிர்ந்து வி.எ

1353 : 1

ஒழிதல் (1)

தங்குதல்

"தங்குதல் எனக் கருத்துப் பொருள் கூறுவர் உரையாசிரியன்மார். அது சொற்பொருளாகாமை எழுத்திகாரத்து விளக்கப்பட்டது. " என்பார் ச. பாலசுந்தரம் இந்நூற்பாக் காண்டிகையுரையில்

தொ.பெ

1214 : 2

ஒழிதல் (2)

நீங்குதல் தொபெ.

1406 : 1

ஒழிந்த

இல்லாத பெ.எ

1001 : 2

ஒழிந்ததை

தவிர்ந்ததை, இல்லாததை வி.அ.பெ. + வே.உ

997 : 1

ஒழிந்ததன்

ஒழியிசையின் (ஒழியிசை ஓகாரத்தின்)

வி.அ.பெ + வே.உ

292 : 1

ஒழிந்தவற்று (இளம்)

ஏனையவற்றின் வி.அ.பெ + வே.உ

292 : 1

ஒழிந்தோர்

எஞ்சியவர், ஏனையோர், வி.அ.பெ

1029 : 2, 1029 : 27, 1454 : 1

ஒழிந்தோர்க்கு

எஞ்சியவர்க்கு பெயர் + வே.உ

1029 : 2

ஒழிப்பினும்

நீங்கினும் வி.எ. + எண்.உ.

1061 : 8, 1064 : 8

ஒழிய (1)

தவிர வி.எ

284 : 4, 316 : 2, 470 : 2, 473 : 2, 533 : 1, 749 : 2, 949 : 2

ஒழிய (2)

முழுமையாக வி.எ

1018 : 3

ஒழியா
எஞ்சாத எ.பெ.எ
1022 : 13

ஒழியாது
நீங்காமல் வி.எ.
158 : 8

ஒழியிசை
சொல்லாமல் எஞ்சிய சொல்லால் உணரப்படும் பொருள் இ.க.சொ. பெயர்
737 : 1, 738 : 1, 741 : 1, 914 : 1, 918 : 1, 1

ஒழியிசையெச்சம்
சொல்லாமல் ஒழிந்த சொல்லைத் தன்னுடைய பொருள் முடிவிற்கு அவாவி நிற்கின்ற எச்சம் இ.க.சொ. பெயர்
918 : 1

ஒழுக்கத்தவன்வயின்
ஒழுக்கமுடையவனிடத்து வி.அ.பெ. + வே.உ.
1100 : 6

ஒழுக்கத்தான
ஒழுக்கத்தால் பெயர் + சா. + வே.உ + அசை
983 : 1

ஒழுக்கத்து
ஒழுக்கத்தில் பெயர் + வே.உ
1026 : 18, 1085 : 1, 1096 : 17, 56, 1097 : 15, 38 1100 : 6

ஒழுக்கத்துக் கண்ணுமை
வாகையின் துறைகளுள் ஒன்று : கட்டுதல் அமைந்த ஒழுக்கத்தைக் குறிப்படும் துறை இது. இ.க.சொ
1026 : 18

ஒழுக்கம்
ஒழுகு நெறி (நடந்து கொள்ளும் முறைமை) பெயர்
1064 : 1, 1084 : 1, 1097 : 28, 1, 100 : 14, 16, 1102 : 1, 1164 : 2, 1467 : 2

ஒழுக்கமும் (1)
ஒழுக்க நெறியும் பெயர் + எண். உ.
1064 : 1, 1102 : 1, 1467 : 2

ஒழுக்கமும் (2)
ஒழுக்க நெறியும் பெயர் + எ. உ.
1084 :1

ஒழுக்கல்
நடாத்துதல் தொ.பெ
113 : 4, 484 : 4

ஒழுகல்
ஒழுகல் என்னும் சொல் (நேர்மை) பெயர்
801 : 1

ஒழுகலும்
நடந்து கொள்ளுதலும் தொ.பெ. + எண்.உ.
1096 : 21

ஒழுகிய
பயின்ற, நடந்த, தகுந்த பெ.எ
133 : 4

ஒழுகியும்
பயின்றும், நடந்தும் வி.எ + எண்.உ.
1409 : 4

ஒழுகினும்
பயின்றாலும் வி.எ + எண்.உ.
1497 : 2

ஒழுகும் (1)
பயிலும், நடக்கும் பெ.எ
418 : 3, 501 : 1, 1084 : 1, 1392 : 2,

ஒழுகும் (2)
பயிலும் வி.மு.
1395 : 2, 1485 : 1, 1488 : 1

ஒழுகு வண்ணம்
அது ஆற்றொழுக்கைப் போலச் சற்றும் தடைபடாமல் தொடர்ந்து செல்லும் பாவோசை, பேரா. நச்சர் இருவரும் " ஒழிந்தனவும் ஒழுகுமாயினும் அவை வேறு வேறிலக்கணமுடையன என்பது " எனக் கூறுகின்றார் இ.க.சொ,பெயர்
1472 : 8, 1485 : 1

ஒள்
ஒளிர்கின்ற பெ.அ.அ.
1022 : 17

ஒளி (1)
பிரகாசம் பெயர்
851 : 1

ஒளி (2)
விழுப்பம் பெயர்
1436 : 1

ஒற்கம்
ஒற்கம் என்னும் சொல் (வறுமை) பெயர்
844 : 1

ஒற்ற (1)

மெய்யெழுத்தாய் நிற்க — வி.எ

48 : 1

ஒற்ற (2)

அழுத்தமாகச்சேர — வி.எ

93 : 2, 94 : 1

ஒற்றல்

மெய்யெழுத்தாதல் — தொ.பெ.

356 : 2

ஒற்றவும்

அழுத்தமாகச் சேரவும் — வி.எ. + எண்.உ.

96 : 2

ஒற்றிடை

நடுவில் உள்ள மெய் — பெயர் + வே. உ.

391 : 1

ஒற்றிய

மெய்யெழுத்தாக நின்ற — பெ.எ.

67 : 2, 297 : 1, 446 : 5

ஒன்றின்

உளவாகிதலால் — பெயர் + வே.உ

1008 : 3

ஒற்று

மெய்யெழுத்து — பெயர்

33 : 1, 48 : 2, 49 : 2, 51 : 2, 115 : 2, 134 : 2, 144 : 3, 161 : 1, 162 : 2, 180 : 2, 192 : 3, 197 : 1, 204 : 3, 206 : 2, 215 : 2, 233 : 1, 261 : 4, 264 : 2, 332 : 3, 345 : 1, 349 : 2, 391 : 1, 408 : 2, 412 : 2, 413 : 1, 414 : 1, 415 : 2, 3, 3, 4, 4, 417 : 1, 418 : 1, 419 : 1, 431 : 3, 433 : 3, 433 : 1,3, 435 : 1, 438 : 2, 439 : 1, 442 : 1, 443 : 1, 444 : 1, 445 : 1, 446 : 2, 448 : 1, 452 : 3, 453 : 1, 454 : 1, 455 : 1, 462 : 1, 463 : 1, 464 : 2, 473 : 2, 476 : 2, 477 : 2, 489 : 1, 490 : 1, 491 : 1, 1265 : 2, 1269 : 1, 1271 : 2, 1279 : 2, 1501 : 1

ஒற்றும் (1)

மெய்யும — பெயர் + எண்.உ.

192 : 3, 433 : 1, 491 : 1

ஒற்றும் (2)

மெய்யெழுத்தாகும் — வி.மு

207 : 1, 232 : 4, 241 : 3, 446 : 1, 464 : 6

ஒற்றுமை

ஒருமைப்படுத்துகின்றமை — பெயர்

1608 : 4

ஒற்றெழுத்து

மெய்யெழுத்து — இ.பெ.ஒ

1269 : 1

ஒற்றே

எழுத்தே — பெயர் + அசை

431 : 3, 442 : 1, 443 : 1, 444 : 1, 445 : 1, 446 : 2, 448 : 1, 449 : 1, 453 : 1, 454 : 1, 455 : 1, 462 : 1, 464 : 2, 467 : 1, 468 : 1, 469 : 1, 489 : 1, 490 : 1

ஒற்றொடு

எழுத்தொடு — பெயர் + வே.உ

1265 : 2, 1271 : 2, 1501 : 1

ஒன்பஃது

ஒன்பது — பெயர்

82 : 2, 1361 : 4

ஒன்பதிற்று

ஒன்பது (9) — பெயர்

171 : 2

ஒன்பதின்

ஒன்பதின் — பெயர். + அசை

1026 : 24

ஒன்பதும்

ஒன்பதும் — பெயர் + மு.உ

655 : 6, 713 : 3, 1503 : 4

ஒன்பாற்கு

ஒன்பதற்கு — பெயர் + வே.உ

473 : 1, 476 : 2

ஒன்பான்

ஒன்பது — பெயர்

438 : 1, 446 : 1, 460 : 1, 464 : 1, 471 : 1, 473 : 1, 481 : 1

ஒன்ற (1)

பொருந்த — வி.எ

1018 : 11, 1607 : 3, 1614 : 4

ஒன்ற (2)

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1235 : 4

ஒன்றல்

பொருந்துதல் — தொ.பெ.

1356 : 1

ஒன்றற்கும்

ஒரு பொருளுக்கும் பெயர் + வே.உ. + எண்.உ.

667 : 2, 668 : 2, 670 : 2, 708 : 4

ஒன்றன் (1)

ஒன்றன்பாலின் பெயர் + வே.உ

703 : 1

ஒன்றன் (2)

ஒரு பெயர் + அசை

1031 : 3

ஒன்றனை

ஒரு பொருளை பெயர் + வே.உ

511 : 2

ஒன்றா

பொருந்தாத எ பெ.எ

991 : 1, 11, 1318 : 2

ஒன்றாகும்

பொருந்தும் வி.மு

521 : 2

ஒன்றி

பொருந்தி வி.எ

538 : 1, 989 : 10, 1026 : 2, 1042 : 2

ஒன்றிய (1)

பொருந்திய பெ.எ

173 : 4, 667 : 2, 668 : 2, 670 : 2, 920 : 2, 991 : 2, 1026 : 6

ஒன்றிய (2)

பொருந்தின வி.அ.பெ.

1561 : 2, 1575 : 2

ஒன்றின்

பொருந்தின் வி.எ.

1353 : 1

ஒன்று (1)

ஒன்று ஆகிய எண் பெயர்

76 : 1, 173 : 3, 200 : 1, 434 ; 1, 438 : 1, 473 : 1, 476 : 1, 2, 487 : 1, 492 : 1, 521 : 2, 555 : 2, 1210 : 3, 1211 : 1, 1392 : 2, 1529 : 1

ஒன்று (2)

பொருந்துகின்ற வி.தொ.அ

526 : 2, 538 : 1, 779 : 2, 1146 : 12

ஒன்றுதல்

பொருந்துதல் தொ.பெ.

1292 : 2

ஒன்றும்

ஒக்கும்; பொருந்தும் வி.மு.

572 : 1, 1031 : 3, 1164 : 3, 1523 : 1, 1538 : 2, 1557 : 1

ஒன்றுமார்

பொருந்துமார் வி.மு+ அசை

572 : 1

ஒன்றே (1)

ஒன்று மட்டுமே பெயர். + தே.ஏ

109 : 8

ஒன்றே (2)

அஃறிணை ஒருமை பெயர் + எண்.ஏ

669 : 2,

ஒன்றே (3)

ஒருவனும் பெயர் + எஎா.ஏ

1042 : 1

ஒன்றே (4)

ஒன்று (ஒரு செய்தி) பெயர் + பிரி.ஏ.

1398 : 1, 1434 : 2

ஒன்றே (5)

ஒன்றே பெயர் + அசை

1434 : 1

ஒன்றொடு

ஒன்றுடன் (ஒரு செய்தியுடன்) பெயர் + வே.உ.

1434 : 1

ஒன்னே (1)

சாரியைகளுள் ஒன்று பெயர் + எண் ஏ

120 : 3

ஒன்னே (2)

சாரியை பெயர் + தே.ஏ

181 : 1

ஒகாரம்

ஓ என்னும் எழுத்து பெயர்

4 : 3, 32 : 1, 63 : 1, 73 : 1, 87 :1, 480 : 2, 670 : 2, 609 : 1, 682 : 2, 698 : 2, 746 : 1, 767 : 2,2

ஓகாரம்மே

ஓ என்னும் எழுத்தே பெயர் + அசை

741 : 3

ஓங்கிய

உயர்ந்த பெ.எ

1084 : 2, 1501 : 3

ஓசை

செய்யுளோசை — பெயர்

1343 : 1, 1344 :1

ஓசையின்

ஓசையால் — பெயர் + வே.உ

1485 : 1

ஓட்டலும்

துரத்துதலும் — தொ.பெ + எண்.உ.

1010 : 11

ஓட்ட

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1239 : 2

ஓட

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1235 : 13

ஓடா (1)

கெடாத (இளம்) போர்க்களத்தை விட்டு ஓடாத (நச்சர்) — எ.பெ.எ

1010 : 7

ஓடா (2)

புறமுதுகிடாத — பெ.எ

1010 : 7

ஓடாக்கழனிலை

வெட்சித் திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று. அது போரில் புறமுதுகிடேன், வெல்வேன் என வஞ்சினம் கூறி அணியப்படும் வீரக்கழலைப் புகழ்தல் — இ.க.சொ; பெயர்

1010 : 7

ஓடி

(செய்யுள் அடிகள்) நடந்து — வி.எ

1492 : 2

ஓடு (1)

மூன்றன் உருபு - உடனிகழ்ச்சி — இ.சொ.

65 : 1, 548 : 1, 659 : 4, 984 : 1, 991 : 23, 998 : 1, 1018 : 11, 1021 : 3, 1039 : 10, 1229 : 1, 1404 : 1, 1538 : 2, 1614 : 4

ஓடு (2)

எண்ணிடைச்சொல் — இ.சொ.

171 : 5, 652 : 7, 654 : 6, 743 : 2, 900 : 3, 989 : 8, 991 : 12, 1025 : 8, 1222 : 1, 1223 : 3, 1263 : 9, 1445 : 3, 1508 : 1, 1592 : 2, 1593 : 1.

ஓடு (3)

ஏழன் பொருளில் — இ.சொ

1153 : 1

ஓடும்

விரைந்து செல்கின்ற — பெ.எ

1514 : 2

ஓத்தினான

ஓதுதல் நிமித்தமாக (இளம்)

பெயர் + சா + வே.உ +அசை

வேதத்தினால் பிறந்த நூல்கள் (நச்சர்)

பெயர் + வே.உ + வி.அ.பெ

980 :1

ஓத்தினானும்

ஓர் இனத்தைச் சேர்ந்த செய்திகளைத் தொகுத்து அமைக்கும் நூற்பகுதி

இ.க.சொ. பெயர் + சா.+ வே.உ + எண்.உ.

1427 : 2

ஓத்து

காண்க · ஓத்தினானும் — பெயர்

1429 : 3

ஓதல்

கற்றல் — தொ.பெ.

974 : 1, 975 :2

ஓதலும்

கற்றலும் — பெயர் + எண். உ.

975 :2

ஓம்படை (1)

போற்றுதல் — பெயர்

583 : 1, 880 : 6, 1040 : 18, 1064 : 25, 1372 : 4

ஓம்படை (2)

பாடாணின் துறைகளுள் ஒன்று நாளாலும், புள்ளாலும் பிற நிமித்தத்தாலும் தலைவனுக்குத் தீதுவராதாகுக (ஓம்படை) எனக்கூறுதல் — இ.க.சொ

1040 : 18

ஓம்பல் (1)

போற்றுக — ஏ.வி.மு.

497 : 1

ஓம்பல் (2)

போற்றல், பாதுகாத்தல் — தொ.பெ.

402 : 3, 1007 : 2

ஓம்பல் (3)

தணித்தல் — தொ.பெ.

1188 : 11

ஓம்பலும்

போற்றலும் — பெயர்+ எண். உ.

1102 : 3

ஓம்பிய

துரத்திய — பெ.எ

1029 : 6

ஓய்தல்

ஓய்தல் என்னும் சொல் (நுணுக்கம்) — பெயர்

814 :1

ஓர்

ஒரு — பெ.அ

3 : 4, 5 : 1, 43 : 1, 45 : 1, 57 : 1, 227 : 1, 268 : 1, 387 : 2, 771 : 2, 964 : 2, 1038 : 1, 1061 : 1, 1316 : 1, 1429 : 2, 1460 : 1, 1530 : 1, 1578 : 1

ஓரற்றே

ஒரே தன்மையதாகும் — கு.வி.மு.+ அசை

62 : 1, 125 : 1, 217 : 1, 226 : 1, 253 : 1, 260 : 1, 267 : 1, 274 :1, 293 : 1, 299 : 1, 319 : 1, 386 : 1, 627 : 1, 1086 : 2, 1492 : 2

ஓரன்ன (1)

ஒரு தன்மையான — கு.வி.மு

2 : 4, 86 : 2, 189 : 2, 232 : 2, 329 : 2, 650 : 11, 655 : 6, 1507 : 1

ஓரன்ன (2)

காண்க : ஓரன்ன — பெ.எ

142 : 1, 647 : 4, 659 : 1, 688 : 4, 707 : 6, 719 : 3

ஓரன்னவ்வே

ஒரு தன்மையானவாகும் — கு.வி.மு. +அசை

669 : 3

ஓரன்னோர்

ஒத்தவர்கள் — வி. அ. பெ.

1101 : 11

ஓரனைய

ஒத்தனவாகும் — கு.வி.மு.

147 : 2, 578 : 3, 709 : 3, 716 : 3

ஓராங்கு

ஒரு படித்தாக (சேனா- வி.எ. : ஓடும், ஆங்கும் அசைகள் (தெய்வச்) — இ.சொ.

726 : 2

ஓரெழுத்துமொழிக்கும்

ஒரு தனி எழுத்து பொருள் தரும் சொல்லாதல் — இ.க.சொ; பெயர் + வே.உ + எண். உ.

227 : 1, 268 : 1

ஓரெழுத்தொருமொழி

காண்க : ஓரெழுத்துமொழிக்கும் — பெயர்

43 : 1, 45 : 1

ஓரையும்

முகூர்த்தமும் (இளம்) — பெயர் + எண். உ.

இராசியின் கண்ணும் (நச்சர்) — பெயர் + தொக்க வே.உ+ எண். உ.

1085:1

ஓலை

தென்னை முதலிய மரங்களின் இலை, — பெயர்

1590 : 1

ஓவும்

ஓகாரமும் — பெயர் + எண். உ.

746 : 1, 767 : 2,2

ஔ

ஔகாரம் — பெயர்

4 : 3, 42 : 1, 62 : 2, 69 : 1, 70 : 1, 87 : 1, 153 : 1, 174 : 1

ஔகாரம்

ஔ என்னும் உயிர் — பெயர்

8 : 1, 55 : 1, 138 : 1, 296 : 1

ஔவும்

ஔ என்னும் உயிரும் — பெயர் + எ.உ

70 : 1

க

ககரம் — பெயர்

19 : 1, 23 : 2, 26 : 3, 48 : 2, 61 : 1, 70 : 1, 130 : 1, 144 : 1, 171 : 4, 204 : 2, 450 : 1, 689 : 3, 690 : 1.

ககாரம்

ககரம் என்னும் மெய்யும் — பெயர்

89 : 1

கட்டினும்

நடந்ததை அறிந்துரைக்கும் குறியிலும்

பெயர் + வே.உ + எண். உ.

1065 : 3

கட்டு

கட்டுதல் — மு.தொ.பெ.

1026 : 18

கட்டுரையின்மை

காதல் மெய்ப்பாடுகள் ஒன்று,அது தலைவி தன் கருத்துக்களைக் கூறாதிருத்தல். — பெயர். + ஒசொ.நீ

1220 : 4

கட்டுரைவகையான்

யாப்பிற்கமையாத உரைநடையின் வகையினால்

இ.பெ.ஒ + வே.உ.

1383 : 1

கடத்தினும்

நேர்த்திக்கடன் செலுத்தற்கண்ணும்

பெயர் + சா + வே.உ.+ எண். உ.

1100 : 4

கடப்பாட்டாண்மையில்

ஒப்புரவினால் — பெயர் + வே.உ

1101 : 6

கடப்பாடு (1)

மரபு — பெயர்

37 : 2, 933 : 6

கடப்பாடு (2)

கட்டாயம் — பெயர்

203 : 4, 546 : 3, 772 : 2.

கடப்பினுள்

அளவு மீறும்போது — பெயர் + சா + வே.உ.

1110 : 1

கடமையும்

விலங்கின்பெண்ணும் — பெயர் + எண். உ.

1505 : 2, 1517 : 1, 1523 : 1, 1567 : 1

கடல்

சமுத்திரம் — பெயர்

1197 : 1, 1459 : 2, 1543 : 1

கடலே

கடல்தான் — பெயர் + எண். ஏ.

1459 : 2

கடவுள்

தெய்வம் — பெயர்

1096 : 9, 1033 : 1

கடவுள்வாழ்த்தொடு

இறைவணக்கத்துடன் — வே.தொ. + வே.உ

1037 : 3

கடவுளும்

தெய்வமும் — பெயர் + எ.உ.

1033 : 1

கடன் (1)

முறைமை — பெயர்

143 : 3, 1571 : 9

கடன் (2)

கடமை — பெயர்

1124 : 1, 1154 : 3, 1374 : 3, 1502 : 4

கடனே (1)

மரபே — பெயர் + அசை

1166 : 2

கடனே (2)

கடமையே — பெயர் + அசை

1502 : 4

கடாஅ

வினா — பெயர்

1608 : 1

கடாவல்

விரைவுபடுத்துதல் — தொ.பெ.

1064 : 43

கடி (1)

நீக்கப்படுகின்ற — வி.தொ.அ.

286 : 2, 390 : 3, 581 : 2, 936 : 1, 961 : 1, 972 : 2, 1042 : 4, 1261 : 1, 1442 : 1, 1537 : 1

கடி (2)

கடி என்னும் சொல் (காப்பு முதலியன) — பெயர்

867 : 1

கடி (3)

காவல் அமைந்த — பெ. அ

1026 : 16

கடிதலும்

நீக்கலும் — தொ.பெ. + எண். உ.

1103 : 2

கடிந்த

விலக்கிய பெ. எ.

1029 : 11

கடிநிலை

நீக்கத்தக்க நிலைமை வி.தொ.

286 : 2, 390 : 3, 581 : 2, 961 : 1

கடிமனை நீத்த பால்

வாகைத்திணையின் துறைகளுள் ஒன்று, இது பிறர் மனை நயவாமையைச் சுட்டும் துறை. நச்சினார்க்கினியர் இதனைக் கட்டில் நீத்த பால் என்பார். அதாவது அரசன் அரசவுரிமையைக் கைவிடுதல். இ.க.சொ.

1026 : 16

கடியல்

நீக்குதல் தொ.பெ.

1571 : 9

கடியவும்

நீக்கவும் வி.எ. + எ. உ.

1285 : 1

கடிவரை

நீக்கும் மரபு வி.தொ. + பெயர்.

972 : 2, 1042 : 4, 1261 : 1, 1442 : 1, 1537 : 1

கடு

கடுமையான பெ.அ.

1064 : 26

கடுப்ப

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 7, 1239 : 1

கடுமை

கடியதன்மை பெயர்

563 : 4, 1064 : 30

கடுவன்

ஆண்குரங்கு பெயர்

1571 : 1

கடுவனும்

விலங்கின் ஆணும் பெயர் + எண்.உ.

1504 : 4

கடு

நஞ்சு பெயர்

1372 : 2

கடுவும்

நஞ்சும் பெயர் + எண். உ.

1372 : 2

கடை (1)

ஏழன் உருபுகளுள் ஒன்று பெயர்

567 : 3

கடை (2)

காலப்பொருளில் வினையெச்சம் போலச் செயல்படும் கடை என்னும் சொல் பெயர்

714 : 1

கடைஇ

செலுத்தி வி. எ.

1018 : 2, 1064 : 27

கடைஇய

வற்புறுத்திக் கேட்ட பெ. எ.

1040 : 13

கடைக்கூட்டிய

செய்து முடித்த பெ. எ.

1009 : 1

கடைக்கூட்டு நிலையும்

பாடாண் திணையைச் சேர்ந்த புறத்துறைகளுள் ஒன்று; அஃது இரவலர்கள் வள்ளல்களின் வாசலை அடைந்து தம் பரிசில் வேட்கையைத் தெரிவித்தல், இது பரிசில் கடாஅ நிலை எனவும் வழங்கப்பெறும். இ.க.சொ., பெயர் + எண். உ.

1040 : 13

கடைக்கொண்டு

மீட்டுக்கொண்டு வி.எ.

991 : 4

கடைக்கோள்

முடிவடைதல் (இளம்) தீதாகக் கருதுதல் (நச்சர்) பெயர்

1142 : 1

கடைநிலையானும்

பாடாண்திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, அஃது இரவலர்கள் வள்ளல்களின் வாயிற் காவலர்களிடம் கூறுதல், இது வாயில் நிலை எனவும் பெயர் பெறும்

இ.க.சொ., பெயர் + அசை + எண்.உ.

1039 : 4

கடைப்பிடித்து

கைக்கொண்டொழுகி, பின்பற்றி — வி.எ.

880 : 5

கண் (1)

விழி — பெயர்

7 : 1, 546 : 1, 1044 : 2, 1058 : 1, 1219 : 5, 1224 : 1, 1529 : 4

கண் (2)

ஏழன் உருபாகிய கண் என்னும் சொல் . — பெயர்

114 : 1, 549 : 3, 566 : 2, 567 : 1, 570 : 2, 574 : 1, 700 : 2

கண் (3)

ஏழன் உருபு — இ. சொ.

133 : 3, 149 : 1, 217 : 1, 226 : 1, 253 : 1, 260 : 1, 267 : 1, 277 : 1, 293 : 1, 296 : 2, 297 : 2, 323 : 1, 348 : 2, 409 : 1, 548 : 1, 573 : 2, 720 : 2, 989 : 2, 1022 : 13, 1025 : 7, 1026 : 16, 1031 : 1, 1057 : 7, 8, 10, 1061 : 15, 20, 21, 23, 24, 32, 34, 1062 : 3, 1064 : 16, 25, 28, 1065 : 4, 9, 11, 1096 : 2, 4, 11, 14, 26, 30, 36, 38, 42, 44, 46, 47, 54, 56, 1097 : 2, 2, 4, 16, 19, 27, 31, 35, 37, 1100 : 2, 7, 9, 10, 13, 19, 22, 1101 : 1, 2, 5, 8, 10, 12, 1109 : 2, 1121 : 2, 1152 : 1, 1171 : 1, 1174 : 6, 1185 : 4, 1188 : 2, 1398 : 2, 1525 : 2, 1537 : 1, 1540 : 1, 1550 : 2, 1610 : 1.

கண் (4)

அசை (இளம்), ஏழன் உருபு (நச்சர்) — இ.சொ.

1022 : 13

கண் (5)

கண்ணோட்டம் — பெயர்

1100 : 28

கண்ட (1)

ஆராய்ந்தறிந்த — பெ.எ.

7 : 2

கண்ட (2)

பார்க்கப்பெற்ற — பெ.எ.

1120 : 3

கண்டது (1)

வழக்கில் உள்ளது — வி. அ. பெ.

990 : 9, 1452 : 2

கண்டது (2)

செய்யப்பெற்றது — வி. அ.பெ.

1598 : 2

கண்டவழியுவத்தல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது தலைவி தலைவனைப் பார்த்தபோது மகிழ்ச்சியடைதல் — தொ. பெ., ஒ.சொ.நீ.

1214 : 2

கண்டி

ஆண் எருமை — பெயர்

1571 : 7

கண்டியும்

விலங்கின் ஆணும் — பெயர் + எண். உ.

1504 : 4

கண்டீர்

அறிந்தீர் — வி.மு.

909 : 1

கண்டு (1)

அறிந்து, பார்த்து — வி.எ.

406 : 2

கண்டு (2)

பார்த்து — வி.எ.

990 : 7, 1100 : 15, 1101 : 3

கண்டுயின் மறுத்தல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது பிரிவாற்றாத தலைவி உறங்காதிருத்தல் — இ.க.சொ., தொ. பெ.,

1219 : 5

கண்டை

பார்த்தாய் — வி.மு.

910 : 2

கண்டோர்

அகப்பொருளில் கூற்றுக்குரிய ஒரு வகையினர் — வி.அ.பெ.

986 : 6, 990 : 9, 1143 : 3, 1449 : 2, 1452 : 2

கண்டோன்

காணப்பட்ட அவன் (தலைமகன்) — வி.அ.பெ.

989 : 4

கண்ணி

கருதி — வி.எ.

1026 : 10

கண்ணிமை

கண் இமைக்கும் நேரம் — ஆ.பெ.

7 : 1

கண்ணிய (1)

பொருந்திய பெ.எ.

211 : 4, 214 : 2, 714 : 2, 743 : 3, 900 : 4, 1026 : 2, 1064 : 21, 1097 : 32, 1101 : 14, 1146 : 2, 1198 : 2, 1236 : 3, 1381 : 3

கண்ணிய (2)

பொருந்தி வி. எ.

1037 : 3, 1040 : 20

கண்ணிய (3)

குறித்த பெ.எ.

1039 : 5, 6, 1040 : 18

கண்ணியும்

பூமாலையும் பெயர் + எண். உ.

1582 : 1, 1584 : 1, 1586 : 1

கண்ணின்று (1)

நிலைபெற்று (இளம்) வி.எ., விழியிலிருந்து (நச்சர்) பெயர் + வே. உ.

1058 : 1

கண்ணின்று (2)

கண்ணோட்டம் இல்லாமல் பெயர் + வி.எ.

1100 : 28

கண்ணினர்

கருதினர் மு.வா.வி.எ.

406 : 2

கண்ணினும்

விழியாலும் பெயர் + வே.உ. + எண். உ.

1224 : 1

கண்ணீர்

விழிப்புனல் பெயர், ஒ.சொ.நீ.

1061 : 22

கண்ணும் (1)

விழியும் பெயர் + எண். உ.

546 : 1

கண்ணும் (2)

ஏழன் உருபாகிய கண் என்னும் சொல்லும் பெயர். + எண். உ.

571 : 1, 591 : 1

கண்ணுமையானும்

கருதுதலும் பெயர் + அசை + எண்.உ.

1026 : 18

கண்ணுற்று

எதிர்ப்பட்டு வி.எ.

99 : 2

கண்ணே (1)

விழியே பெயர் + எண். ஏ.

1044 : 2

கண்ணே (2)

விழியே பெயர் + அசை

1529 : 4

கண்படை

தூக்கம் பெயர்

1039 : 5

கண்படை நிலையும்

பாடாண் திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, அது மன்னன் இனிது துயில் கொள்ள வேண்டி அவனுடைய சிறப்புக்களைப் புகழ்ந்துபாடுதல் இ. க.சொ.; பெயர் + எண். உ.

1039 : 5

கணவர்

மணவாளன் வே.அ.

1029 : 12

கணவனை

மணவாளனை பெயர் + வே. உ.

1029 : 24

கணவனொடு

மணவாளனொடு பெயர் + வே. உ.

1029 : 22, 30

கணையும்

அம்பும் பெயர் + எண். உ.

1021 : 1

கதழ்வும்

கதழ்வு என்னும் சொல்லும் (விரைவு) பெயர் + எண். உ.

799 : 1

கந்தழி

பாடாண்திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, அது ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்பார் நச்சர். இதற்கு இளம். பொருள் ஏதும் கூறவில்லை. இ.க.சொ., பெயர்

1037 : 1

கபிலை கண்ணிய வேள்வி நிலையும்

யாகத்தின்போது அந்தணர்களுக்குக் கறவை மாடுகளைக் கொடுத்தலைப் புகழ்தல்

இ.க.சொ., + எண். உ.

1039 : 6

கம்பலை

கம்பலை என்னும் சொல் (ஒலி) பெயர்

833 : 1

கம்மும்

கம் என்னும் சொல்லும் (தொழில்) பெயர் + எண். உ.

329 : 1

கமம்

கமம் என்னும் சொல் (நிறைவு) பெயர்

839 : 1

கய

கய என்னும் சொல் (மென்மை) பெயர்

806 : 1

கயந்தலை

குழந்தை பெயர்

1097 : 8

கயவும்

கய என்னும் சொலலும் (பெருமை) பெயர் + எண்.உ.

804 : 1

கரகம்

நீர்ச்செம்பு பெயர்

1573 : 1

கரணத்தின்

திருமணச் சடங்கின் பெயர் + சா + வே.உ.

1096 : 1

கரணம்

திருமணம் பெயர்

1093 : 1, 1094 : 1, 1095 : 2, 1096 : 1

கரணமொடு

திருமணத்தொடு பெயர் + வே.உ.

1092 : 1

கரத்தலும்

மறைத்தலும் தொ.பெ. + எண். உ.

1154 : 1

கரந்தது

மறைந்தது வி. அ.பெ.

1384 : 2

கரந்திடத்தொழிதல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று; அது (1) தலைமகனைக் காண்டல் வேட்கையால் மறைவில் நின்று உரையாடுதல் (இளம்) (2) தான் இற்செறிக்கப்படுதலால் தலைவனை மறுத்த ஏதத்திற்கு நாணியும் அஞ்சியும் அவற்கு வெளிப்படாது ஒழுகுதல் (பேரா.)

இ.க.சொ., பெயர்

1214 : 2

கரந்து

மறைத்து வி.எ.

1386 : 1

கரந்தை

இதனை வெட்சித்திணையின் ஒரு பகுதியாக இளம். கொள்கிறார். ஆனால் நச்சர், கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரை மீட்டோர் பூச்சூடுதலில் பெற்ற பெயராதலின் வெட்சித்திணைபோல ஒழுக்கம் அன்று என்கிறார்.

இ.க.சொ., பெயர்

1010 : 14

கராம்

முதலை வகை பெயர்

1538 : 2

கராமும்

முதலையும் பெயர் + எண்.உ.

1519 : 1

கராமோடு

முதலையோடு பெயர் + வே.உ.

1538 : 2

கரிப்பும்

காரச்சுவையும் பெயர் + எண். உ.

868 : 1

கரு

திணைகளுக்குரிய கருப்பொருள் பெயர்

950 : 1, 967 : 3

கருதல்

நினைத்தல் தொ.பெ.

1209 : 7

கருதி

நினைத்து, மனதில் படைத்து வி.எ.

1612 : 7

கருதிய (1)

குறித்த பெ.எ.

991 : 13, 1032 : 2

கருதிய (2)

குறித்து வி.எ.

1040 : 1

கருமம்

செயல் பெயர்

570 : 1, 1073 : 4, 1460 : 2

கருமத்து

செயலின் பெயர் + வே. உ.

1120 : 1

கருவி (1)

சாதனம் பெயர்

558 : 3, 565 : 3, 598 : 2, 719 : 1, 1044 : 4, 1577 : 1

கருவி (2)

கருவி என்னும் சொல் (தொகுதி) பெயர்

838 : 1

கருவியில்

சாதனத்தில் பெயர் + அசை.

565 : 3

கருவியும்

சாதனமும் பெயர் + எண்.உ.

719 : 1, 1577 : 1

கல்

பாறை பெயர்

1010 : 19, 1013 : 7

கல்கோள்

போரில் இறந்த வீரனின் நடுகல்லிற்கு ஏற்ற கல்லைத் தேர்ந்தெடுத்தலைக் கூறுதல், வெட்சித்திணைப் புறத்துறை பெயர்

1010 : 19

கல்லொடு

நடுகல்லோடு பெயர் + வே.உ.

1010 : 21

கல்வி

கலைபயில்வு பெயர்

1138 : 1, 1206 : 1

கலக்கமும் (1)

மனக்குழப்பமும் பெயர் + எண்.உ.

1064 : 29

கலக்கமும் (2)

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, தம் காதலரின் பிரிவாற்றாமையால் வருத்தம் முதிர்ந்து மனங் கலங்குதல் பெயர் + எ. உ.

1219 : 11

கலங்கலும்

குழம்புதலும் தொ.பெ. + எண்.உ.

1051 : 7, 1122 : 5

கலங்கி

வருந்தி வி.எ.

1057 : 4, 1061 : 12

கலங்கி மொழிதல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது ஆறாக் காதலின் விளைவாகச் சொல் தடுமாறுதல் பெயர், ஒ. சொ.நீ.

1215 : 2

கலங்கினும்

கலங்கினாலும் வி.எ. + எண். உ.

1061 : 5, 9

கலங்கு

வருந்துகின்ற வி.தொ.அ.

991 : 4

கலத்தின்

ஆவணம் பெயர் + அசை

565 : 3

கலந்த (1)

சந்தித்த பெ.எ.

965 : 1

கலந்த (2)

இணைந்த பெ.எ.

1439 : 1, 1593 : 2

கலம்

ஒரு முகத்தலளவை பெயர்

169 : 1

கலி (1)

செருக்கிய பெ.எ.அ.

1144 : 4

கலி (2)

நால்வகைப்பாவில் ஒன்று; அஃது ஒத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பா, கொச்சகம், உறழ்கலி என நால்வகைப்படும் இ.க.சொ., பெயர்

1003 : 3, 1319 : 2, 1336 : 1, 1343 : 1, 1365 : 1, 1368 : 2, 1370 : 4, 1390 : 2.

கலித்தளை

காய்முன் நிரை வருவதால் நேரும் தளை. இ.க.சொ., பெயர்

1285 : 1, 1286 : 1

கலியிற்கு

கலிப்பாவிற்கு பெயர் + சா + வே.உ.

1319 : 2

கலியே (1)

கலி என்று சொல்லும் (ஒலி) பெயர் + எண்.ஏ.

833 : 1

கலியே (2)

கலிப்பாவும் பெயர் + எண்.ஏ.

1003 : 3, 1336 : 1

கலிவெண்பாட்டே

ஒரே பொருண்மை பற்றி வெண்பா நடையில் பல அடிகளைப் பெற்று வரும் கலிவெண்பா. இ.க.சொ., பெயர் + எண்.ஏ.

1390 : 1, 1419 : 1

கலுழ்ந்தோளை

வருந்தியவளை வி. அ. பெ. + வே.உ.

989 : 6

கலை

மான் பெயர்

1548 : 1

கலையும்

கலை என்னும் சொல்லும் (மான்) பெயர் + எண்.உ

1504 : 2, 1547 : 1

கவர்

மாறுபடுகின்ற வி.தொ.அ.

1064 : 6

கவர்வு

கவர்வு என்னும் சொல் (விருப்பு) பெயர்

846 : 1

கவரி

மான்வகையுள் ஒன்று பெயர்

1538 : 1, 1541 : 1, 1560 : 1

கவரியும்

மானும் பெயர் + எண்.உ.

1519 : 1

கவவு

கவவு என்னும் சொல் (தழுவுதல்) பெயர்

841 : 1

கவவொடு

தழுவலொடு பெயர் + வே.உ.

1123 : 3

கவிழ்தல்

இறத்தல் தொ.பெ.

1010 : 15

கவின்

அழகு பெயர்

865 : 1

கழங்கினும்

வேலன் கூறும் குறியினும் பெயர் + வே.உ + எண்.உ

1065 : 3

கழல்

வீரக்கழல், (காலில் அணியப்பெறும் அணிகலன்) பெயர்

1010 : 7

கழலும்

வீரக்கழலும் பெயர் + எண்.உ.

1586 : 1

கழறல்

கூறுதல் தொ.பெ.

1184 : 3, 1220 : 1

கழறி

இடித்துரைத்து வி.எ.

1101 : 7, 1123 : 1

கழனிலை

வெட்சித்திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று. அது களத்தில் எந்நிலையிலும் புறமுதுகிடாத வீரத்தைச் சிறப்பித்து வழங்கப்பெறும் வீரக்கழலைப் புகழ்தல் இ.க.சொ., பெயர்

1010 : 7

கழி

மிகுந்த பெ.அ.

1013 : 13, 1029 : 26

கழிந்த

நிகழ்ந்து முடிந்த பெ.எ.

843 : 2

கழிந்தோர்

அறிவு மிகுந்தவர்கள் வி. அ. பெ.

1029 : 2

கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை

காஞ்சித் துறைகளுள் ஒன்று. முதுகாஞ்சி என அழைக்கப்படும். அறிவுமிக்கோர், இளமை கழியாதோர்க்குத் தாம் கண்ட உண்மையைக் கூறல். இ.க.சொ., பெயர்

1029 : 2

கழிந்தோர்

இறந்தோர் பெயர்

1029 : 26

கழிந்தோர் தேஎத்து

இறந்தவர்கள் மாட்டு பெயர் + வே.உ.

1029 : 26

கழிநெடிற்கு

கழிநெடிலடி, அஃதாவது ஐந்து சீர்களைக் கொண்ட செய்யுளடி இ.க.சொ., பெயர் + வே.உ.

1301 : 1

கழியாது

காலம் செல்லாது வி.மு.

1072 : 1

கழிவினும்

இறந்தகாலத்தினும் பெயர் + வே.உ. + எண்.உ

1103 : 1

கழிவு

மாறாகும் தன்மை பெயர்

1167 : 1

கழிவும்

கழிவு என்னும் சொல்லும் (உள்ளது சிறத்தல்) பெயர் + எண்.உ.

798 : 1

கழிவே

தீர்ந்துவிட்ட செயலும் பெயர் + எண்.ஏ.

737 : 1

கழுதை

ஒரு விலங்கு வகை பெயர்

1555 : 1

கழுதையும்

கழுதையும் பெயர் + எண்.உ.

1517 : 1

கழும்

கழும் என்னும் சொல் (மயக்கம்) பெயர்

835 : 1

கள்

விகுதிகளுள் ஒன்று பெயர்

656 : 1

கள்வர்

திருடர் பெயர்

1205 : 1

கள்ள

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 7, 1238 : 2

கள்ளொடு

கள் என்னும் விகுதியோடு பெயர் + வே.உ.

656 : 1

களம் (1)

காதலர்கள் களவில் சந்திக்கும் இடம் பெயர்

1057 : 4, 1061 : 28, 1070 : 2

களம் (2)

கட்டும் கழங்கும் இட்டுரைக்கும் இடம், வெறியாட்டிடமும் ஆம். பெயர்

1064 : 39

களவழி

வாகைத்திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, ஏர்க்களத்தில் தானியங்களைக் குவிக்கும் ஏர்க்களவழியும், போர்க்களத்தில் பகைவர்களைக் கொன்று குவிக்கும் போர்க்களவழியும் என இரு வகைப்படும். இ.க.சொ., பெயர்

1026 : 3, 3

களவியல்

களவொழுக்கத்தின் இலக்கணம் கூறும் நூற்பகுதி. பொருளதிகாரத்தின் மூன்றாம் பிரிவின் பெயர். இ.க.சொ., பெயர்

களவின்

பிறர் அறியாமல் பெயர் + வே.உ.

1007 : 1

களவினில்

களவொழுக்கத்தின்கண் பெயர் + சா + வே.உ.

1448 : 4

களவினுள்

களவொழுக்கத்துள் பெயர் + சா + வே.உ.

1096 : 18

களவு

காதலர் இருவர் தாமே அன்பு கொண்டு பிறர் அறியாமல் காதலிக்கும் ஒழுக்கம்

இ.க.சொ., பெயர்

1049 : 5, 1061 : 25, 1065 : 1, 1089 : 1, 1096 : 18, 1112 : 1, 1174 : 3, 1448 : 4

களவும்

களவினும் பெயர் + எண்.உ.

1112 : 1

களன் (1)

காதலர் சந்திக்கும் இடம்

1064 : 31, 1082 : 1

களன் (2)

செய்யுள் உறுப்புகளுள் ஒன்று, (இடம், அதாவது செய்யுளில் கூற்று நிகழ்த்துவதற்கான இடம்)

இ.க.சொ., பெயர்

1263 : 6

களன் (3)

அரசவை பெயர்

860 : 1

களனும் (1)

அரசவையும் பெயர் + எண்.உ.

860 : 1

களனும் (2)

காதலர் சந்திக்கும் இடமும் பெயர் + எண்.உ.

1064 : 31

களனே (1)

களன்தான் பெயர் + அசை

1082 : 1

களனே (2)

செய்யுள் உறுப்பு பெயர் + எண்.ஏ.

1263 : 6

களிற்றொடு

யானையொடு பெயர் + வே.உ.

1022 : 9

களிறு

யானை பெயர்

1022 : 9, 1504 : 1, 1536 : 1, 1574 : 2

களிறெறிந்தோர் பாடு

தும்பையின் புறத்துறைகளுள் ஒன்று. இத்துறை களிற்றினை எதிர்த்து போர்செய்யும் வீரனின் பெருமையைக் குறிக்கும். இ.க.சொ., பெயர்

1022 : 9

களை

நீக்குக ஏ.வி.மு.

989 : 7

களைதல்

கழற்றுதல் தொ.பெ.

1211 : 1

களையும்

அகற்றுகின்ற பெ. எ.

1044 : 4

கற்பியல்

கற்பொழுக்கத்தின் இலக்கணம் கூறும் நூற்பகுதி. பொருளதிகாரத்தின் நான்காம் பிரிவின் பெயர்.

இ.க.சொ., பெயர்.

கற்பில்

கற்பொழுக்கத்தினின்றும் பெயர் + வே.உ.

1097 : 39

கற்பிற்கு

கற்பினுக்கு பெயர் + சா + வே.உ.

1449 : 5

கற்பின் (1)

கற்றால் வி.எ.

557 : 4

கற்பின் (2)

கற்பொழுக்கத்தின் பெயர் + வே.உ.

1065 : 9

கற்பினுள்ளே

கற்பினுள்ளே பெயர் + சா + வே.உ. + அசை

1177 : 2

கற்பினொடு

கற்பினோடு பெயர் + சா + வே.உ.

1091 : 1

கற்பு

ஆணும் பெண்ணும் மணந்து கொண்டு வாழ்தல்

இ.க.சொ., பெயர்

1063 : 2, 1065 : 9, 1092 : 1, 1177 : 2, 1182 : 1, 1446 : 4.

கற்பும்

கற்பும் பெயர் + எண். உ.

1102 : 1, 1196 : 2

கற்புவழிப்பட்டவள்

மணந்துகொள்ளப்பெற்ற மனைவி வி.அ.பெ.

1182 : 1

கற்பொடு

கற்பொழுக்கத்துடன் பெயர் + வே.உ.

991 : 5

கறுப்பும்

கறுப்பும் என்னும் சொல்லும் (சினம்) பெயர் + எண்.உ

856 : 1

கன்

கன் என்னும் சொல் (உலோகத்தொழில்) பெயர்

347 : 2

கன்றலின்

தொடர்ந்து ஈடுபடுதல் தொ. பெ. + அசை

557 : 7

கன்றலும்

கன்றுதற்பொருளும் பெயர் + எண்.உ.

572 : 1

கன்று

விலங்கின் இளமைப்பெயர் பெயர்

1517 : 2

கன்றும்

விலங்கு மற்றும் தாவரத்தின் இளமைப்பெயர் பெயர் + எண். உ.

1503 : 3

கன்றே

மரத்தின் இளமைப்பெயர் பெயர் + எண்.ஏ.

1526 : 1

கன்னும்

கன் என்னும் சொல்லும் பெயர் + எண். உ.

346 : 1

கனவின்

சொப்பனத்தில் பெயர் + வே.உ.

1065 : 6

கனவு

சொப்பனம் பெயர்

1065 : 6, 1147 : 1, 1209 : 5

கனவும்

சொப்பனமும் (காமப்பொருண்மை நிகழும் இடங்களுள் ஒன்று) பெயர் + எ.உ.

1147 : 1

கனவின் அரற்றல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது பிரிவாற்றாத தலைவி தன் கனவை நனவாகக் கருதி மயங்குதல் பெயர், ஒ. சொ. நீ.

1065 : 6

கா (1)

ஒரு நிறை பெயர்

170 : 1

கா (2)

அசைச்சொற்களுள் ஒன்று பெயர்

764 : 1

கா (3)

மலர்ச்சோலை பெயர்

1141 : 1

காஞ்சி

நிலையாமையை வற்புறுத்தும் புறத்திணை இ.க.சொ., பெயர்

1027 : 1

காட்சி (1)

வெட்சித்திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, அது போரில் இறந்த வீரனுக்கு நடுகல் நாட்ட ஏற்ற கல்லைக் காணுதல்; நடுகல் நாட்டப்பெற்ற பிறகு வழிபட்டுத் தரிசித்தலும் ஆம், கற்காண்டல் என்றும் கூறப்பெறும். இ.க.சொ., பெயர்

1010 : 19

காட்சி (2)

சந்திப்பு பெயர்

1040 : 4, 1057 : 4

காட்சி (3)

மனத்தாற் காணுதல் (நச்சர்) பெயர்

1063 : 2

காட்சி (4)

நாமம் பெயர்

1548 : 1

காட்சி (5)

தோற்றத்தினை உடையவாகிய (பேரா.) பெயர்

1614 : 1

காட்சியான

அறிவால் — பெயர் + வே.உ. + அசை

83 : 8

காட்சியில்

பொருந்தின அவ்விடத்தே (இளம்) நெஞ்சினை (நச்சர்) — பெயர் + வே.உ.

101 : 4

காட்சியும்

சந்தித்தலும் — பெயர் + எண்.உ.

965 : 1

காட்டல் (1)

காட்டுக — ஏ.வி.மு.

947 : 4

காட்டல் (2)

தெரிவித்தல் — தொ.பெ.

1196 : 7

காட்டலும்

காண்பித்தலும் — தொ.பெ. + எண்.உ.

990 : 2, 1118 : 3, 4, 1159 : 2

காட்டி (1)

காண்பித்து — வி.எ.

1097 : 12

காட்டி (2)

விளக்கி — வி.எ.

1425 : 4

காட்டிய (1)

விளக்கிய, உரைத்த — பெ. எ.

1029 : 2, 1051 : 9, 1100 : 23.

காட்டிய (2)

சுட்டிக்காட்டிய — பெ.எ.

1096 : 17

காட்டினும்

காண்பித்தாலும் — வி.எ. + எண்.உ.

1064 : 39

காட்டுதல்

அறிவித்தல — தொ.பெ.

1100 : 7

காட்டுறுதல்

காண்பிக்க விழைதல் — தொ.பெ.

1061 : 1

காடு

வனம் — பெயர்

952 : 1

காடுவாழ்த்தொடு

காஞ்சித்திணையின் புறத்துறைகளுள் ஒன்று, அது நிலையாமை பெற்ற உலகில் என்றும் நிலைத்துள்ள ஈமக்காட்டை வாழ்த்துதல் — இ.க.சொ., பெயர் + எ. இ.சொ.

1029 : 35

காண்டல்

பார்த்தல் — தொ.பெ.

1061 : 1

காண்டிகை

நூல் உரைவகைகளுள் ஒன்று, அது நூற்பாவிற்கு வெளியே செல்லாமல் விரிவாகவும், காரண காரியத்தொடர்புடனும், எடுத்துக்காட்டுடனும் அமைவது — இ.க.சொ., பெயர்

1602 : 1, 1603 : 2, 1605 : 2

காண்ப

பார்த்துக் கொள்வர் — வி.மு.

1042 : 3

காண்பவை

கண்ணால் பார்க்கப்படுபவை — வி.அ.பெ.

1553 : 3

காணா

பாராத — எ.பெ.எ.

1057 : 2

காணின்

பார்த்தால் — வி.எ.

1097 : 30

காணினும்

பார்த்தாலும் — வி.எ. + எண்.உ.

1065 : 2

காணும்

ஆராய்கின்ற — பெ.எ.

1041 : 3, 1110 : 2

காத்த (1)

இற்செறிந்த — பெ.எ.

1061 : 26

காத்த (2)

தடுத்த — பெ. எ.

1100 : 28

காத்தல்

பாதுகாத்தல் — தொ.பெ.

1124 : 1, 1614 : 12

காத்தை

காத்தை என்னும் சொல் (பாதுகாத்தனை)- பெயர்

910 : 2

காதல்

சிறப்பன்பு, பெண்ணோ ஆணோ ஒருவரை ஒருவர் அன்பு செலுத்துதல் — பெயர்

541 : 5, 557 : 3, 561 : 4, 812 : 1, 1064 : 32, 1065 : 6, 1097 : 30, 1101 : 6, 1220 : 4, 1228 : 1

காதலன்

கணவன் — பெயர்

1029 : 29

காதலி

மனைவி — பெயர்

1029 : 29

காதலில்

அன்பினால் — பெயர் + வே.உ.

1061 : 28

காதலின் (1)

விரும்புதலில், அன்பு செலுத்துவதில் பெயர் + அசை

557 : 3, 561 : 4

காதலின் (2)

விருப்பத்தினால் (போர் மீது) — பெயர் + சா

1026 : 2

காது

செவி — பெயர்

1211 : 1

காதொன்று களைதல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று. அது தலைவனை முதன் முதலிற் கண்டு காதல் கொண்ட தலைவி, தன் காதணிகளுள் ஒன்றை விழச்செய்து அதனைச் தேடுகின்றாள் போல நிற்றல்.

இ.க.சொ., பெயர்

1211 : 1

காந்தளும்

வெட்சித்திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, அது புறப்பொருள் தொடர்பாக வேலனின் வெறியாட்டைக் கூறுதல்

இ.க.சொ., பெயர் + எண்.உ.

1010 : 2

காப்பின்

பாதுகாவல் — பெயர் + அசை

557 : 1, 1064 : 3

காப்பினுள்ளே

இற்செறிப்பில் — பெயர் + சா + வே.உ. + அசை

1164 : 3

காப்பு

காவல் — பெயர்

557 : 1, 867 : 2, 1064 : 30, 1121 : 1, 1159 : 1, 1163 : 2, 1164 : 3, 30, 1605 : 2

காப்பும்

காவலும் — பெயர் + எண்.உ.

1121 : 1, 1159 : 1

காப்பே

காவல்தான் — பெயர் + எண்.ஏ.

867 : 2

காமக்கிழத்தி

வரைந்து கொள்ளப்படாத துணைவி — பெயர்

1096 : 49, 1097 : 18, 36

காமக்கிழத்தியர்

துணைவியர் — பெயர்

1101 : 14

காமக்கிழவன்

களவியற் தலைவன் — பெயர்

1063 : 4

காமக்கூட்டம்

தலைவனும் தலைவியும் முதன்முதலில் சந்தித்துக் கூடும் கூட்டம், இயற்கைப் புணர்ச்சி.

இ.க.சொ., பெயர்

1041 : 3, 1069 : 1

காமத்திணையில்

களவொழுக்கத்தில் — இ.பெ.ஒ. + வே.உ.

1058 : 1

காமத்தின்

காதலின் — பெயர் + சா.

1096 : 41

காமத்து

காதலில் — பெயர் + சா.

1001 : 2, 3, 1097 : 6, 1113 : 1

காமப்புணர்ச்சியும்

காண்க : காமக்கூட்டம் பெயர் + எண்.உ.

1445 : 1

காமநீத்தபால்

வாகையின் துறைகளுள் ஒன்று. இது ஆசையைத் துறத்தல் பற்றிப் பேசுவது. இ.க.சொ., பெயர்

1026 : 23

காமம்

காதல் பெயர்

1000 : 1, 2, 3, 1026 : 23, 1031 : 2, 1033 : 1, 1041 : 3, 1058 : 1, 1059 : 1, 1061 : 33, 1065 : 1, 1069 : 1, 1097 : 6, 1102 : 1, 1110 : 1, 1113 : 1, 1127 : 1, 1142 : 1, 1146 : 2, 1222 : 2, 1381 : 3, 1445 : 1

காமமும்

காதலும் பெயர் + எண்.உ.

1102 : 1

காமர்

அழகு பெயர்

1097 : 8

காய்

கனியாத நிலை பெயர்

1592 : 1

காய்தல்

வெறுத்தல் தொ.பெ.

1097 : 40, 1221 : 2

காய்தலும்

வெறுத்தலும் பெயர் + எண்.உ.

1097 : 40

காய்ப்ப

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 8, 1240 : 1

காய்வு

வெறுப்பு பெயர்

1101 : 8

காயம்

வானம் பெயர்

306 : 1

காயே

கனியாதது பெயர் + எண்.ஏ.

1592 : 1

கார்

மழைக்காலம் பெயர்

953 : 1

காரமும்

காரம் என்ற எழுத்தும் பெயர். + எண்.உ.

135 : 1

காரணம்

ஒரு விளைவிற்கு மூலம் பெயர்

505 : 1, 506 : 1, 524 : 1, 878 : 1, 1061 : 26, 1064 : 15, 1364 : 2

காரும்

மழைக்காலமும் பெயர் + எண்.உ.

953 : 1

கால் (1)

ஏழன் சொல்லுருபுகளுள் ஒன்று பெயர்

567 : 1

கால் (2)

காலப்பொருளில் வரும்போது வினையெச்சம் போலச் செயல்படும் கால் என்னும் சொல். பெயர்

714 : 1

காலக்கிளவி

வினைச்சொல் பெயர்

701 : 3, 706 : 9

காலக்கிளவியொடு

வினைச்சொல்லோடு பெயர் + வே. உ.

694 : 2

காலத்தானும்

நேரத்திலும், இடத்தும் (நிற்குமிடத்தும்) பெயர் + அசை + எண்.உ,

766 : 2, 3

காலத்தின்

நேரத்தின் பெயர் + சா + வே.உ.

566 : 3, 596 : 6

காலத்து (1)

காலம் உடையவாய் (இளம்), காலத்தின்கண் (சேனா, நச்சர்), காலச்சொல்லோடே (தெய்வச்) பெயர் + அசை

898 : 1

காலத்து (2)

நேரம் பெயர் + அசை

991 : 19, 1061 : 14, 1062 : 1, 1079 : 1, 1096 : 8, 1100 : 23, 24, 1136 : 2, 1155 : 1

காலத்தும்

நேரத்திலும், காலத்திலும்

பெயர் + சா. + எண்.உ

726 : 1, 1

காலம் (1)

(பயிலும்) இடம் — பெயர்

165 : 5, 522 : 2, 638 : 3

காலம் (2)

பருவம் — பெயர்

242 : 1

காலம் (3)

காலக்கடவுள் — ஆ.பெ.

542 : 1

காலம் (4)

நேரம், வேளை, சமயம் — பெயர்

566 : 3, 596 : 6, 991 : 19, 1061 : 14, 1062 : 1, 4, 1079 : 1, 1094 : 2, 1096 : 8, 1100 : 23, 24, 1136 : 2, 1197 : 2, 1155 : 1

காலம் (5)

இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய காலங்களைக் குறிக்கும் சொல். — பெயர்

555 : 1, 598 : 2, 685 : 2, 686 : 1, 687 : 2, 688 : 2, 700 : 4, 7, 712 : 2, 714 : 2, 719 : 1, 725 : 1, 2, 726 : 1, 3, 730 : 1, 732 : 1, 733 : 1, 735 : 3, 738 : 1, 739 : 1, 911 : 2, 986 : 5, 1025 : 4, 1040 : 18, 20, 1263 : 6, 1463 : 1

காலம் (6)

காலகட்டம் (அந்தந்தக் காலம்) — பெயர்

936 : 1

காலமும் (1)

இறப்பு, நிகழ்வு, எதிர் என்னும் மூவகையான காலங்கள் — இ.க. சொ., பெயர் + மு.உ.

687 : 2, 725 : 1, 732 : 1, 911 : 2, 1025 : 4

காலமும் (2)

காலமும் — பெயர் + எண். உ.

719 : 1

காலமும் (3)

காலமும் — பெயர் + எ.உ.

733 : 1

காலமும் (4)

நேரமும் — பெயர் + எ.உ.

1062 : 4, 1094 : 2

காலமொடு

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூவகைக்காலமொடு — இ.க.சொ + வே.உ.

685 : 2, 688 : 2, 735 : 3

காலை

பொழுது

(பொதுவாக வினையோடு சேர்ந்து வரும் காலை என்னும் சொல் கால் என்பதன் திரிபாகக் கொள்ளப்பட்டு வினையெச்ச விகுதியாகக் கருதப்படும்.) — பெயர்

13 : 2, 22 : 2, 40 : 3, 57 : 2, 83 : 6, 108 : 5, 113 : 4, 130 : 1, 131 : 1, 167 : 1, 170 : 2, 200 : 2, 203 : 3, 241 : 1, 259 : 1, 2, 261 : 2, 266 : 2, 284 : 2, 285 : 1, 306 : 3, 312 : 1, 317 : 1, 318 : 2, 327 : 1, 375 : 1, 400 : 2, 431 : 5, 433 : 4, 435 : 2, 447 : 2, 450 : 1, 452 : 1, 456 : 1, 465 : 1, 472 : 1, 480 : 1, 508 : 2, 539 : 2, 568 : 1, 575 : 2, 583 : 2, 601 : 4, 637 : 2, 639 : 2, 647 : 2, 659 : 3, 678 : 2, 685 : 2, 730 : 3, 735 : 9, 782 : 1, 887 : 1, 921 : 1, 927 : 1, 950 : 3, 963 : 3, 971 : 1, 1030 : 2, 1041 : 3, 1057 : 6, 1061 : 27, 1068 : 2, 1081 : 3, 1093 : 2, 1096 : 1, 53, 1097 : 17, 1110 : 2, 1123 : 3, 1137 : 3, 1142 : 1, 1144 : 1, 1151 : 1, 1153 : 1, 1175 : 1, 1176 : 2, 1185 : 1, 1227 : 1, 1235 : 15, 1245 : 1, 1247 : 2, 1311 : 1, 1312 : 2, 1406 : 2, 1425 : 2, 1455 : 2, 1494 : 1, 1510 : 2, 1513 : 2, 1528 : 2, 1558 : 2, 1573 : 2, 1604 : 3.

காலையும் (1)

பொழுதும், போதும் — பெயர் + எண்.உ.

237 : 1, 480 : 1, 766 : 4, 1061 : 11, 1064 : 15

காலையும் (2)

பொழுதும் — பெயர் + எ.உ.

437 : 1

காவலர்க்கு

காப்பவருக்கு — பெயர் + வே.உ.

1039 : 4

காவல்

பாதுகாத்தல் — தொ.பெ.

1026 : 20

காவலானும்

காவலோடும் — பெயர் + அசை + எண்.உ.

1026 : 20

காவற்பாங்கின்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது பிரிவாற்றாத தலைவி தான் மட்டுமே மிக வருந்துவதாகக் கூறி நொந்து கொள்ளுதல் — இ.க.சொ., தொ.பெ.

1219 : 1

துன்புறும்

வருந்துகின்ற — பெ.எ.

1134 : 1

துன்னுதல்

நெருங்குதல் — தொ.பெ.

1029 : 11

துனி

புலவி (இளம்) துன்பம் (பேரா) — பெயர்

1254 : 1

துனைவும்

துனைவு என்னும் சொல்லும் (விரைவு) — பெயர் + எண்.உ.

799 : 1

தூக்கு

சீர், அடிகளின் அமைப்பால் ஒரு பாவிற்கு அமைகின்ற செய்யுளோசை. — இ.க.சொ. பெயர்

1331 : 1, 1347 : 1

தூக்கே (1)

காண்க : தூக்கு — பெயர் + எண்.ஏ.

1263 : 3

தூக்கே (2)

காண்க : தூக்கு — பெயர் + அசை

1331 : 1

தூங்க

ஒலிக்க — வி.எ.

1010 : 17

தூங்கல் வண்ணம்

வஞ்சித் தளையால் தோன்றும் பாவோசை — இ.க.சொ., பெயர்

1472 : 10, 1489 : 1

தூங்கலோசை

வஞ்சித்தளையால் உண்டாகும் பாவோசை — இ.க.சொ., இ.பெ.ஒ.

1344 : 1

தூணி

தூணி என்னும் அளவை (4 மரக்கால்) — பெயர்

240 : 1

தூது

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் செய்தி கொண்டு போதல் — பெயர்

974 : 1, 975 : 2, 991 : 15, 1220 : 3

தூதும்

காண்க : தூது. — பெயர் + எண்.உ.

975 : 2

தூதுவர்

தூது சொல்பவர் — பெயர்

1069 : 2

தூவி

பறவையின் இறகு — பெயர்

1551 : 2

தெய்வக்கடத்தினும்

தெய்வத்திற்குச் செலுத்த வேண்டிய நேர்த்திக் கடனைக் குறிப்பிடும்போதும் (தெய்வக்கடம் நான்கன் தொகை, ஒ.சொ. நீ) இ.க.சொ., பெயர்

1100 : 4

தெய்வம்

கடவுள் — பெயர்

488 : 3, 542 : 2, 967 : 1, 986 : 2, 997 : 1, 1065 : 7, 1221 : 1, 1370 : 1

தெரி

தெளிவாகப் புலப்படுகின்ற — வி.தொ.அ.

103 : 2, 142 : 1, 537 : 4, 658 : 1, 740 : 2, 741 : 2, 892 : 1, 1581 : 1

தெரித்து

தெளிவித்து — வி.எ.

540 : 1

தெரிதல்

அறிதல் — தொ.பெ.

1010 : 3

தெரிதலும்

அறியப்படுதலும் — பெயர் + எண்.உ.

643 : 1, 1

தெரிந்த

அறிந்த — பெ.எ.

516 : 4, 1500 : 1

தெரிந்தனர்

ஆராய்ந்து — மு.வா.வி.எ.

780 : 4, 1362 : 1, 1461 : 2

தெரிந்து

ஆராய்ந்து — வி.எ.

53 : 1, 565 : 5

தெரிந்துகொண்டு

அறிந்துகொண்டு — வி.எ.

1614 : 26

தெரிந்துடம்படுதல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது தலைவனின் கையுறையை ஏற்ற தலைவி, பின் விளைவுகளை ஆராய்ந்து அதற்கு ஒப்புதல். இ.க.சொ., தொ.பெ.

1214 : 1

தெரிநிலை

தெளிவாக உணரப்படும் நிலை — வி.தொ.

658 : 1, 740 : 2, 741 : 2

தெரிநிலைக் கிளவி

ஒரு பொருளை ஆராயும் நிலைமைக் கண் வரும் சொல் — இ.க.சொ., பெயர்

741 : 2

தெரிப

அறிவார்கள் — கு.வி.மு.

582 : 2

தெரிபு (1)

அறிந்துகொண்டு — வி.எ.

533 : 2

தெரிபு (2)

அறியப்படுதல் — பெயர்

644 : 1, 659 : 4, 675 : 2, 1604 : 7

தெரிய

விளங்க — வி.எ.

1146 : 2

தெரியின்

ஆராய்ந்தால் — வி.எ.

875 : 1, 1224 : 2, 1350 : 2, 1373 : 1, 1384 : 1, 1420 : 2, 1423 : 1, 1443 : 1

தெரியும்

அறியப்படும் — பெ.எ

13 : 2, 22 : 2, 83 : 8, 261 : 2, 647 : 2, 678 : 2

தெரியுமோர்க்கே

ஆராய்வோர்க்கு — பெயர் + வே.உ. + அசை

587 : 4, 1179 : 2, 1286 : 2

தெரிவு

தேர்ந்தெடுத்துக் கொள்வது — பெயர்

1574 : 4

தெருமரல்

தெருமரல் என்னும் சொல் (சுழற்சி) — பெயர்

794 : 1

தெருளா

தெளியாத — எ.பெ.எ.

1061 : 27

தெவ்வு

தெவ்வு என்னும் சொல் (பகை) — பெயர்

830 : 1

தெவு

தெவு என்னும் சொல் (கவர்தல்) — பெயர்

829 : 1

தெள்ளிது

தெளியப்பட்டது — கு.வி.அ. பெ

574 : 2

தெள்ளியோர்

ஆராய்ந்து அறிந்தவர்கள் — வி.அ..பெ.

1502 : 4

தெளி

தெளியப்பட்ட — வி.தொ.அ.

638 : 4, 1244 : 2

தெளித்தலும்

உரியவிளக்கம் கூறிச் சினத்தை ஆற்றுதல் — தொ.பெ. + எண்.உ.

991 : 23

தெளிதல்

ஐயமற உணர்தல் — தொ.பெ.

1221 : 1

தெளிந்தோள்

தெளிந்தவளாகிய தலைவி — வி.அ.பெ.

1061 : 18

தெளிய

ஐயமற — வி.எ.

605 : 2

தெளியுமோரே

தெளிபவர்கள் — வி.அ.பெ. + அசை

640 : 3

தெளிவின்ஏயும்

தெளிந்த ஏயும் — பெயர் + எண்.உ.

746 : 1

தெளிவு (1)

ஐயமற்ற அறிவு — பெயர்

1050 : 4

தெளிவு (2)

தலைவன், தலைவியின் ஊடலைப் போக்கக் கூறிய விளக்கம் — இ.க.சொ., பெயர்

1061 : 8

தெளிவும்

உறுதியையும் — பெயர் + எண்.உ.

730 : 3

தெற்கொடு

தெற்கு என்னும் சொல்லுடன் — பெயர் + வே.உ.

433 : 4

தெற்றென்றற்றே

தெளியப்பட்டது — வி.அ.பெ. + அசை

134 : 2

தெற்றென

தெற்று என்று — வி.எ.

1608 : 4

தெறற்கு

அழன்று நோக்குதற்கு — பெயர் + வே.உ.

1100 : 2

தேஎத்து (1)

ஏழன்சொல்லுருபு, மாட்டு — இ.சொ.

(எ.கா. கழிந்தோர் தேஎத்து, கழிந்தோர் மாட்டு)

986 : 6, 1029 : 26, 1041 : 4, 1096 : 6, 15, 1197 : 1, 1128 : 1

தேஎத்து (2)

நாட்டினுடைய — பெயர் + வே.உ.

1096 : 51

தேஎம்

நாடு — பெயர்

1017 : 1

தேய்வும்

குறைபாடும் — பெயர் + எண்.உ.

1013 : 10

தேயமும் (1)

நாடும் பெயர் + எண்.உ.

990 : 3

தேயமும் (2)

கூறுபாடும் பெயர் + எண்.உ.

1025 : 5

தேர் (1)

இரதம், ஒரு வகை ஊர்தி பெயர்

1026 : 5, 6, 1161 : 1, 1574 : 2, 1586 : 2

தேர் (2)

ஆயும் (இளம்) தெளியும் (நச்சர்) வி.தொ.அ.

1127 : 1

தேர்தல்

ஆராய்தல் தொ.பெ.

1500 : 2

தேர்ந்து

ஆராய்ந்து வி.எ.

101 : 2

தேர்நிலை

ஆய்ந்தநிலை. ஆராய்ச்சி நிலை (இளம்) தேர்வதற்குரிய நிலை, தெளிவு நிலை என இரு பொருள் (நச்சர்) வி.தொ.

1127 : 1

தேராது

நினையாமல் வி.எ.

1100 : 12

தேரும் (1)

ஆராய்கின்ற பெ.எ.

57 : 2, 203 : 3, 963 : 3

தேரும் (2)

இரதமும் பெயர் + எண்.உ.

1161 : 1, 1574 : 2, 1586 : 2

தேரோர்

தேர் ஊர்ந்து பொரும் வீரர் (இளம்) தேர் ஏறி வரும் பொருநரும், புலவரும். பெயர்

1026 : 4, 4

தேரோர் தோற்றிய வென்றி

வாகையின் துறைகளுள் ஒன்று. போர்க்களத்தைப் பாடும்போது அதனை உழவுத் தொழிலுடன் ஒப்பிட்டுக் கூறும் துறை இது. இகசொ., பெயர்

1026 : 4

தேவகை

திசையின் கூறு வே.தொ.

567 : 2

தேவர்

கடவுளர், அமரர், வானுலகினர் பெயர்

1398 : 2

தேற்றம் (1)

ஒன்றை இதுதான் என உறுதிப்படுத்துதல் பெயர்

274 : 1, 742 : 1, 750 : 1

தேற்றம் (2)

தெளிவு பெயர்

1051 : 5

தேற்றமும்

இதுதான் என உறுதிப்படுத்துதலும் பெயர் + எண்.உ.

273 : 3

தேற்றவெகரமும்

தேற்றேகாரமும் பெயர் + எண்.உ.

274 : 1

தேற

தெளிவுபெற வி.எ.

537 : 4

தேறலும்

தெளிவடைதலும் தொ.பெ. + எண்.உ

1061 : 29

தேறுதல்

தெளிவடைதல் தொ.பெ.

1001 : 2

தேன்

தேன் என்னும் சொல் (இனிப்புத் திரவம்) பெயர்

341 : 1

தைவரல்

தடவுதல் தொ.பெ.

1211 : 2, 1212 : 1

தொக்க (1)

மறைந்து நின்ற (இளம், சேனா, தெய்வச்) அடுக்கி நின்ற (நச்சர்) பெ.எ

774 : 1

தொக்க (2)

வெளிப்படாமல் மறைந்து நின்ற பெ.எ.

901 : 2, 3

தொக்க (3)

கூடிய — பெ.எ.

1039 : 11

தொக

வெளிப்படாமல் மறைந்து நிற்க — வி.எ.

585 : 1, 590 : 1, 901 : 1

தொகல்

தொக்கு நிற்றல் (மறைந்து நிற்றல்) — தொ.பெ.

776 : 1

தொகாஅ

மறைந்து நிற்காது (தொக்கு நில்லாது) — வி.மு.

591 : 2

தொகு

தொக்கு நிற்கும் — வி.தொ.அ.

483 : 5, 7

தொகுக்கும்வழி

மறைந்து நிற்கச் செய்யும் விதத்தில், சுருக்கும் வழி — வி.எ.

887 : 3

தொகுத்த

சுருக்கிய — பெ.எ.

1614 : 17

தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்

நூல் உத்திகளுள் ஒன்று, அது பலவாக வகுத்துக் கூறியவற்றை ஒரு சொல்லால் தொகுத்துக் கூறுதல். (மாறன் அலங்காரம், இதனை, சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல் என்னும்) — இ.க.சொ., பெயர்

1614 : 17

தொகுத்தல் (1)

செய்திகளை கோர்வையுடன் திரட்டி சுருக்குதல் — தொ.பெ.

1601 : 1

தொகுத்தல் (2)

குவித்தல், திரட்டி வைத்தல் — பெயர்

557 : 5

தொகுத்தலும்

மறைத்தலும் (எழுத்துக்களைத் தவிர்த்து அமைத்தல்) — பெயர் + எண்.உ.

887 : 3

தொகுத்துக்கூறல்

இலக்கிய உத்திகளுள் ஒன்று, அது கூறப்பெற்ற செய்திகளை ஓரிடத்தே சுருக்கிக் கூறுதல் — இ.க.சொ., பெயர்

1614 : 3

தொகுதி (1)

திரள் — பெயர்

112 : 1, 898 : 1

தொகுதி (2)

சேர்க்கை — பெயர்

483 : 9, 838 : 1

தொகுதி (3)

தொகைச்சொற்பெறுதல் — பெயர்

772 : 2

தொகுதிக்கண்ணும்

தொக்க இடத்தும் — பெயர் + வே.உ. + எண்.உ.

133 : 3

தொகுப்பின்

சுருக்கிக்கூறின் — வி.எ.

1367 : 1

தொகூஉம்

புணர்கின்ற — பெ.எ.

351 : 3

தொகை

எண்ணிக்கை — பெயர்

775 : 4

தொகைஇ

சேர்ந்து — வி.எ.

541 : 6, 598 : 4, 600 : 5, 650 : 10, 706 : 5, 741 : 2, 967 : 2, 986 : 4, 1001 : 3, 1013 : 12, 1018 : 12, 1029 : 17, 1039 : 10, 1051 : 5, 1057 : 14, 1064 : 35, 1096 : 57, 1097 : 26, 42, 1156 : 3, 1213 : 3, 1221 : 6, 1263 : 13, 1449 : 4

தொகைச்சொல்

(முற்றும்மை) தொக்குநிற்கின்ற தொடர் — இ.பெ.ஒ.

770 : 1

தொகைநிலை (1)

உழிஞைத்திணையைச் சேர்ந்த புறத்துறைகளுள் ஒன்று, அதுபோரில் வென்ற வேந்தன், தன் படையினரைச் சிறப்பிக்க ஓர் இடத்தில் கூட்டுவதைக் கூறுதல் (பாராட்டுக் கூட்டம் நடத்துதல்) — இ.க.சொ., பெயர்

1018 : 12

தொகைநிலை (2)

தும்பைத்திணைப் புறத்துறைகளுள் ஒன்று, அது போரில் இருதரப்பினரும் முற்றிலுமாக இறந்து விடுவதைக் கூறுதல் — இ.க.சொ., பெயர்

1022 : 13

தொகைநிலை (3)

தொகுதி — பெயர்

1025 : 9

தொகைநிலை (4)

சுருக்கம் — பெயர்

1380 : 1

தொகைநிலைக்கண்ணும்

தும்பைத்திணைத் தொகைநிலைத்துறையிடத்தும் — பெயர் + வே.உ. + எண்.உ.

1022 : 13

தொகைநிலைக்கிளவி

தொகுத்துக் கூறப்படும்பொருள் — இ.பெ.ஒ.

1462 : 2

தொகைமரபு

தொகையும் மரபும் பற்றி விளக்கும் நூற்பகுதி; எழுத்ததிகாரத்தின் ஐந்தாம் இயலின் பெயர் — இ.க.சொ., பெயர்

தொகைமொழி

வேற்றுமை உருபு முதலியன தொக்குநிற்கும் சொற்றொடர், இது அறுவகைப்படும். — இ.க.சொ., இ.பெ.ஒ.

224 : 1, 895 : 4

தொகையினும்

தொகுக்கப்பட்டும் — பெயர் + சா + எண்.உ.

1425 : 4

தொகையும் (1)

தொகைச்சொல்லும் — பெயர் + எ.உ.

552 : 1

தொகையும் (2)

தொகைச்சொற்களும் — பெயர் + மு.உ.

903 : 1

தொகைவயின் (1)

தொக்க இடத்தின் கண் — பெயர் + வே.உ.

568 : 2

தொகைவயின் (2)

தொகுநிலைத் தொடரின்கண் — பெயர் + வே.உ.

580 : 1

தொகைவிரி

முதல்நூலைச் சில இடங்களில் விரித்தும், சில இடங்களில் சுருக்கியும் செய்யப்பெறும் வழிநூல் வகை — இ.க.சொ., பெயர்

1601 : 1

தொட்டது

தீண்டப்பெற்றது — வி.அ.பெ.

1096 : 12

தொட்டு

தீண்டி — வி.எ.

1051 : 1

தொடக்கம்

முதல்நிலை — பெயர்

321 : 2

தொடர் (1)

இரண்டிற்குமேல் அமைந்து வருகின்ற — வி.தொ.ஆ.

36 : 1, 45 : 2, 50 : 2, 82 : 1, 2, 146 : 3, 214 : 2, 357 : 3, 408 : 2, 410 : 1, 415 : 1, 1, 3, 427 : 1.

தொடர் (2)

காண்க : தொடர்மொழி — பெயர்

215 : 1

தொடர்ந்து

(எழுத்து முதலிய) இரண்டிற்கு மேற்பட்டு ஒன்றன் பின்னொன்றாக இணைந்து — வி.எ.

588 : 1

தொடர்மொழி

இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய சொல் தொடர்புபடுத்திக் கூறுமிடத்து (நச்சா) தொடர்ந்து சொல்லுமிடத்து (இளம்) — இ.க.சொ., வி.தொ.

36 : 1, 45 : 2, 50 : 2, 82 : 1, 2, 146 : 3, 214 : 2, 408 : 2, 410 : 1, 415 : 1, 1, 3.

தொடர்வயின்

காண்க : தொடர் — பெயர் + வே.உ.

482 : 4

தொடரின்

இடையறாமல் வந்தால் — வி.எ.

1430 : 2

தொடரும்

காண்க : தொடர்மொழி — பெயர் + எண்.உ.

414 : 1, 1, 418 : 1

தொடாஅக்காஞ்சியும்

காஞ்சித்திணைக்குரிய தொடாக்காஞ்சி என்னும் புறத்துறை, அது போரில் புண்பட்ட தன் கணவனைப் பேய்கள் தொடாமல் மனைவி பாதுகாக்கும் சிறப்பினைக் கூறுதல்.
இ.க.சொ., பெயர் + எண்.உ.

1029 : 11

தொடி

வளையல் பெயர்

1452 : 1

தொடுக்கும் (1)

(செய்யுளாகப்) புனைகின்ற பெ.எ.

887 : 1

தொடுக்கும் (2)

அமைக்கும் வி.மு.

1486 : 1, 1491 : 1

தொடுத்தற்கண்ணும்

வகைக்கொள்ளுமிடத்தும் தொ.பெ + வே.உ. + எண்.உ.

1096 : 14

தொடை (1)

எதுகை முதலிய ஐந்து வகையான செய்யுள் தொடைகள், செந்தொடையோடு ஆறும் ஆம்.
இ.க.சொ., பெயர்.

1263 : 3, 1294 : 1, 1329 : 1, 1348 : 2, 1354 : 1, 1357 : 1, 1360 : 1, 1361 : 1, 1363 : 1

தொடை (2)

பாகுபெற்ற செய்யுள் உறுப்பு பெயர்

1405 : 1

தொடைக்கும்

காண்க தொடை (1) பெயர் + வே.உ. + மு.உ.

1354 : 1

தொடையே

காண்க தொடை (1) பெயர் + அசை

1294 : 1, 1357 : 1

தொடையொடு

காண்க தொடை (1) பெயர் + வே.உ.

1360 : 1

தொண்டு

ஒன்பது பெயர்

1361 : 3

தொல்

பழைய பெ.அ.அ.

356 : 3, 587 : 1, 596 : 9, 933 : 3, 1017 : 3, 1026 : 12, 1096 : 5, 1097 : 35, 1122 : 2, 1195 : 2, 1449 : 5, 1497 : 3

தொல் இயற்று இவர்தல்

உழிஞைத்திணையின் துறைகளுள் ஒன்று. அரணின் கண் பரந்து போரிடல் (இளம்). நச்சர். இதனை "தொல் இயற்கு இவர்தல்" எனப் பாடம் கொண்டு இவ்வாறு விளக்கம் தருவர். "ஒரு காலத்தும் அழிவில்லாத மதிலை இற்றைப் பகலுள் அழித்துமென்று கூறி அஃது அழித்தற்கு முயற்சி செய்தல். இ.க.சொ., பெயர்

1017 : 3

தொல்லவை

பழைய செய்திகள் பெயர்

1118 : 1

தொல்லை

பழைய பெ.அ.

410 : 2

தொல்லோர்

முற்காலத்தவர் பெயர்

1063 : 3

தொழில் (1)

வினை(ச்சொல்) பெயர்

109 : 5, 6, 7, 125 : 2, 133 : 1, 157 : 3, 211 : 3, 248 : 1, 306 : 3, 526 : 2, 620 : 1, 681 : 2

தொழில் (2)

செயல் பெயர்

225 : 4, 598 : 5, 1096 : 53, 1139 : 1

தொழில்தொகுமொழி

வினைத்தொகை பெயர்

483 : 7

தொழில்வயின்

வினைச்சொல்லின் கண் பெயர் + வே.உ.

681 : 2

தொழிலில் (1)

காண்க : தொழில் பெயர் + வே.உ.

620 : 1

தொழிலில் (2)

செயலினால் பெயர் + வே.உ.

1584 : 1

தொழிலினும்

வினைச்சொற்களிலும் பெயர் + வே.உ. + எண்.உ.

534 : 1

தொழிலும் (1)

வினைச்சொல்லும் பெயர் + எண்.உ.

133 : 1

தொழிலும் (2)

செயலும் பெயர் + எண்.உ.

1121 : 1

தொழிலே

காண்க : தொழில் பெயர் + அசை

1139 : 1

தொழிலை

வினைச்சொல்லை பெயர் + வே.உ.

109, 5, 7

தொழிலொடு

வினைச்சொல்லுடன் பெயர் + வே.உ.

109 : 6, 7

தொழிற்கருவியும்

தொழிலைச் செய்வதற்குத் தேவையான சாதனமும் வே.தொ. + எண்.உ.

1577 : 1

தொழிற்கு

செயலுக்கு பெயர் + வே.உ.

1061 : 10

தொழிற்கே

வினைச்சொல்லின்கண் பெயர் + வே.உ. + அசை

125 : 2

தொழிற்சொல் முன்

வினைச்சொல்லின் முன்னர் பெயர் + வே.உ.

157 : 3

தொழிற்பட

தொழில் உண்டாகுமாறு வி.எ.

731 : 2

தொழிற்படுத்து

செயலை (ஒன்றன் மேல்) ஏற்றி வி.எ.

1146 : 7

தொழிற்பெயர்

ஒருவினை நிகழ்தலைச் சுட்டுகின்ற பெயர்ச்சொல் இ.க.சொ., பெயர்.

297 : 1, 307 : 1, 1, 310 : 1, 328 : 1, 1, 346 : 2, 374 : 1, 377 : 1, 1, 383 : 1, 402 : 1, 1, 404 : 1, 581 : 1, 626 : 1

தொழிற்பெயர்க்கு

காண்க : தொழிற்பெயர் பெயர் + வே.உ.

581 : 1

தொழிற்று

செய்கையை உடையது கு.வி.அ. பெ.

256 : 1, 474 : 1

தொழினிலை

வினைநிலை (வினைச்சொல்) ஆ.பெ.

555 : 2

தொறும்

(குறிப்பிடப்பட்டவை) ஒவ்வொன்றிலும் இ.சொ.

969 : 2, 1352 : 1

தொன்முறை மனைவி

(ஒருவனுடைய) மூத்த மனைவி பெயர்

1122 : 2

தொன்மை

செய்யுள் வனப்புகள் எட்டனுள் ஒன்று, அது பழைய வரலாற்றைப் பாடுபொருளாகக் கொள்ளுதல். இ.க.சொ., பெயர்

1263 : 11, 1496 : 1

தொன்று

பழமை பெயர்

238 : 3

தோடே

ஓலை பெயர் + எண்.உ.

1590 : 1

தோல் (1)

காய்கனி ஆகியவற்றின் புறப்போர்வை பெயர்

1592 : 1

தோல் (2)

செய்யுளுக்குரிய எட்டு வனப்புகளுள் ஒன்று, அது மென்மையான சொற்களால் அறம் பொருள் இன்பம் ஆகிய சிறந்த பொருள்களைக் கூறுவதும், எல்லாச் சொற்களோடும் கூடிய பல அடிகளை உடையது எனவும் இருவகைப்படும். இ.க.சொ. பெயர்

1263 : 11, 1497 : 3

தோல் (3)

(தன்மேல் எய்யப்பெறும் படைக் கருவிகளைத் தடுக்கப் பயன்படும்) கேடயம் பெயர்

1017 : 3

தோவின் பெருக்கம்

புறத்திணையில் உழிஞைத்திணையின் துறைகளுள் ஒனறு. தோற்படையினரின் பெருமையைப் பற்றிய துறை இது. இ.க.சொ. பெயர்

1017 : 3

தோலே (1)

காண்க : தோல் (2) பெயர் + எண்.ஏ.

1263 : 11

தோலே (2)

காய், கனி, ஆகியவற்றின் புறப்போர்வை பெயர் + எண்.ஏ

1592 : 1

தோழி

அகப்பொருள் தலைவியின் பாங்கி பெயர்

986 : 6, 989 : 10, 1051 : 13, 18, 1057: 11, 1061 : 12, 22. 1064 : 46, 1065 : 7,8, 1071 : 1, 1096 : 8, 44, 1097 : 38, 1099 : 1, 1100 : 32, 1107 : 2 1143 : 1, 1155 : 2, 1186 : 1, 1188 : 2, 1251 : 1, 1257 : 1, 1445 : 2, 1148 : 1

தோழிக்கண்ணும்

காண்க : தோழி பெயர் + வே.உ + எண்.உ

1096 : 44

தோழிக்கு

காண்க தோழி பெயர் + வே.உ

1061 : 12,, 1062 : 3, 1097 : 38, 1100 : 32, 1107 : 2, 1251 : 1

தோழிகண்

காண்க தோழி பெயர் + வே.உ

1188 : 2

தோழிதேஎத்தும்

தோழி மாட்டும் பெயர் + வே.உ + எண்.உ

986 : 6

தோழியிற்புணர்வும்

பாங்கியிற் கூட்டம், அஃதாவது தலைவன் தோழியின் உதவியால் தலைவியைக் கூடுதல் பெயர் + எண்.உ.

1445 : 2

தோழியின்

பாங்கியின் பெயர் + வே.உ.

1257 : 1

தோழியை

பாங்கியை பெயர் + வே.உ

1051 : 13, 1065 : 7

தோழியைக் குறையுறும் பகுதி

தலைவன் தன் குறையைத் தெரிவிக்கும் நிலை. இது தலைவன் கூற்று நிகழ்த்தும் நிலைகளுள் ஒன்று. பெயர் + வே..உ

1065 : 8

தோழியொடு

பாங்கியொடு பெயர் + வே.உ

1065 : 8

தோளும்

புயமும் பெயர் + எண். உ.

546 : 1

தோற்ற

வருமிடத்து வி.எ

1328 : 2

தோற்றம் (1)

வெளிப்படுதல் பெயர்

133 : 3, 494 : 3, 1008 : 6, 1120 : 4, 1225 : 2

தோற்றம் (2)

(சொற்களிடையே) உண்டாதல் பெயர்

330 : 2

தோற்றம் (3)

வருமொழியாய் வருதல் பெயர்

344 : 1

தோற்றம் (4)

வடிவம் பெயர்

347 : 2, 892 : 2, 1064 : 1, 1262 : 1

தோற்றம் (5)

வருகை பெயர்

354 : 2, 412 : 3, 1170 : 3

தோற்றம் (6)

வருகை (இளம்) பிறப்பு அல்லது சாதி (பேரா) பெயர்

1258 : 1

தோற்றமும் (1)

வடிவமும் பெயர் + எ. உ.

892 : 2, 1064 : 1

தோற்றமும் (2)

காட்சியளித்தலும் பெயர் + எ.உ.

1035 : 1

தோற்றல்

தோன்றுதல் தொ.பெ

1061 : 4

தோற்றவும்

வெளிப்படவும் வி.எ + எ.உ.

1109 : 3

தோற்றிய

வெளிப்படுத்திய பெ.எ

1026 : 4

தோற்றோர்

தோல்வியடைந்தவர்கள் வி.அ.பெ

1013 : 10

தோன்ற

வெளிப்படுமாறு வி.எ

578 : 1, 1428 : 5

தோன்றல் (1)

உண்டாதல் தொ.பெ.

194 : 2, 596 : 9, 647 : 5,687 : 3, 688 : 5, 710 : 2

தோன்றல் (2)

வழங்கப்படுதல் தொ.பெ.

683 : 3

தோன்றல் (3)

மிகுதி பெயர்

991 : 18

தோன்றல் (4)

காட்சியளித்தல் தொ.பெ

1215 : 1

தோன்றலான

வழங்கப்படுதலால் பெயர் + வே.உ + அசை

683 : 3

தோன்றலும் (1)

வெளிப்படலும் தொ.பெ + எண்.உ

157 : 4, 158 : 1, 2, 3, 7

தோன்றலும் (2)

(பொருள்) வெளிப்படுதலும் தொ.பெ. + எண்.உ

644 : 1, 660 : 2

தோன்றலும் (3)

வருதலும் தொ.பெ+ எ.உ.

960 : 1

தோன்றா (1)

வழங்கப்படாது வி.மு

153 : 4, 483 : 11

தோன்றா (2)

தோன்றமாட்டாது வி.மு

555 : 1, 878 : 1

தோன்றா (3)

உருவாகாத எ.பெ.எ

1195 : 3

தோன்றாது

வெளிப்படாது, உருவாகாது வி.மு

129 : 3, 411 : 2, 1451 : 2

தோன்றி (1)

பிறந்து வி.எ

83 : 1, 483 : 2, 782 : 2

தோன்றி (2)

ஏற்பட்டு வி.எ

234 : 2, 688 : 1, 889 : 3

தோன்றி (3)

வந்து வி.எ

482 : 3, 779 : 1, 780: 3, 1097 : 20, 1271 : 2. 1319 : 1

தோன்றி (4)

காட்சியளித்து வி.எ

553 : 1, 990 : 1, 1040 : 4, 1436 : 2

தோன்றி (5)

வெளிப்பட்டு வி.எ

1428 : 3

தோன்றிய (1)

வழங்கப்படும் பெ.எ.

45 : 3, 161 : 3, 916 : 2

தோன்றிய (2)

வந்த பெ.எ

453 : 2, 457 : 2

தோன்றிய (3)

மிகுத்துக் கூறிய பெ.எ

1040 : 15

தோன்றிய (4)

வெளிப்பட்ட — பெ.எ

1064 : 35, 1198: 1

தோன்றிய (5)

ஏற்பட்ட — பெ.எ

1095 : 1

தோன்றிய (6)

பிறந்த — பெ.எ

1097: 8

தோன்றின் (1)

வந்தால் — வி.எ

165 : 5, 204 : 2, 206 : 1, 481 : 2, 484 : 3, 522 : 2, 638 : 3, 661 : 5, 716 : 1, 1129 : 1

தோன்றின் (2)

வெளிப்படுமாயின் — வி.எ

1500 : 2

தோன்றினும் (1)

வந்தாலும் — வி.எ + எ. உ.

111:2, 319 : 1, 604 : 1, 781 : 1, 874 : 2,

தோன்றினும் (2)

வந்தாலும் — வி.எ + எண்.உ

479 : 2, 782 : 4, 5

தோன்றினும் (3)

காட்சியளித்தலும் — வி.எ + எண்.உ

1065 : 2

தோன்று (1)

வெளிப்படுகின்ற — வி.தொ.அ

18 : 2

தோன்று (2)

வருகின்ற — வி.தொ.அ

550 : 2

தோன்று (3)

சிறப்புற்று விளங்குகின்ற — வி.தொ.அ

1431 : 2

தோன்றும் (1)

வரும், உருவாகும் — வி.மு

24 : 2, 28 : 1, 29 : 2, 138 : 1, 151 : 1, 190 : 2, 196 : 2, 197 : 1, 216 : 1, 515 : 2, 524 : 2, 566 : 4, 646 : 2, 685 : 2, 700 : 4, 708 : 4, 730 : 2, 732 : 2, 914 : 4, 989 : 10, 1063 : 6, 1133 : 1, 1403 : 1, 1450 : 4

தோன்றும் (2)

வெளிப்படும் — வி.மு.

35 : 2, 537 : 4, 538 : 1, 766 : 6, 873 : 4, 1000 : 6, 113 : 1, 1241 : 1, 1243 : 2

தோன்றும் (3)

உண்டாகும் — வி.மு.

39 : 1, 56 : 2, 167 : 2, 556 : 4, 1117 : 2, 1174 : 6, 1254 : 2, 1400 : 3

தோன்றும் (4)

வெளிப்படுகின்ற — பெ.எ

40 : 1, 495 : 1,2, 605 : 2, 727 : 4, 867 : 5

தோன்றும் (5)

பிறக்கும் — வி.மு.

100 : 3

தோன்றும் (6)

வழங்கப்படும் — வி.மு.

135 : 2, 396 : 1, 491 : 3, 515 : 2, 1546 : 1,

தோன்றும் (7)

வருகின்ற — பெ.எ

144 : 1, 195 : 2, 248 : 1, 356 : 1, 357 : 2, 447 : 2, 512 : 2, 565 : 7, 633 : 2, 1414 : 3

தோன்றும் (8)

காட்சியளிக்கும் — வி.மு.

227 : 2, 364 : 2, 957 2, 1006 : 4, 1022 : 18, 1136: 2

தோன்றும் (9)

நிலைபெறுகின்ற — பெ.எ

725 : 1, 991 : 16

தோன்றுவது

பொருள்படுவது — வி.அ.பெ

1435 : 2

ந

ந என்னும் எழுத்து — பெயர்

20 : 1, 25 : 1, 27 : 1, 48 : 2, 61 : 1, 72 : 2, 74 : 1, 78 : 1, 130 : 2, 144 : 3, 145 : 1, 150 : 2, 153 : 2, 171 : 4, 183 : 1, 206 : 1, 298 : 1, 451 : 1, 452 : 1, 479 : 2, 641 : 1, 894 : 1

நகரம்

'ந' என்னும் எழுத்து — பெயர்

67 : 2, 2,, 299 : 1

நகரமிசை

'ந' கரத்தின் மேல் பெயர் + வே.உ

67 : 2

நகரமொடு

'ந' என்ற எழுத்தொடு பெயர் + வே.உ.

67 : 2

நகாரம்

'ந' என்ற எழுத்து பெயர்

79 : 1, 93 : 3, 462 : 1, 464 : 3

நகினும்

சிரித்தாலும் வி.எ + எண். உ.

1052 : 2

நகுநயமறைத்தல்

காதல் மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது முதல் முதலாகக் காதலின் வேட்கையை அறிந்து கொண்ட மகிழ்ச்சியால் தோன்றும் தன் சிரிப்பை பிறர் காணாதபடி தலைவி மறைத்துக் கொள்ளுதல் இ.க.சொ. தொ.பெ.

1210 : 2

நகை (1)

சிரிப்பு பெயர்

1029 : 10, 1050 : 2, 1064 : 21, 1101 : 9, 1201 : 2

நகை (2)

உள்ளுறை உவமம் ஐந்தனுள் ஒன்று, அது சிரிப்பால் வேறொரு குறிப்புப் பொருள் தோன்றுதல். (இளம்) நகையாடி ஒன்று நினைத்து ஒன்று கூறுதல் (நச்சர்) இ.க.சொ. பெயர்

1191 : 1

நகை (3)

எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய சிரிப்பு இ.க.சொ. பெயர்

1200 : 1, 1201 : 2

நகைமொழியானும்

நகைச்சுவையை உண்டாக்கும் சொற்களாலும் வே.தொ. + வே.உ + எண்.உ

1432 : 4

நகையே

காண்க : நகை (3) பெயர் + எண்.ஏ

1200 : 1

நசை

விருப்பம் பெயர்

813 : 1, 1012 : 1

நசையொடும்

அன்போடும் பெயர் + வே.உ + எண் உ

1389 : 1

நட்பின் (1)

சிநேகிதம், கேண்மையின் பெயர் + அசை

561 : 4

நட்பின் (2)

கேண்மையின் பெயர் + வே.உ

1149 : 2

நட்பு

கேண்மை பெயர்

561 : 4, 1149 : 2

நடக்கும்

இயலும் வி. மு

1325 : 1

நடக்கை

ஒழுக்லாறு பெயர்

1040 : 19, 1121 : 2, 1149 : 2

நடக்கையது

காண்க : நடக்கை பெயர் + ப.பொ.வி

1040 : 19

நடுக்கம்

அதிர்வு பெயர்

800 : 1

நடுக்கு

யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோமே எனும் மன நிகழ்ச்சி (இளம்) பெயர்

1209 : 9

நடுங்க

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 12

நடுதல்

வெட்சியின் புறத்துறைகளுள் ஒன்று. இது புறனடையாகும். இறந்த வீரனது நினைவாகக் கல்லினை ஊன்றுதல் இத்துறை இ.க.சொ., தொ.பெ.

1010 : 19

நடுவண்

(நடு + அண்) இடையில் பொருந்துகின்ற வி.தொ.அ

949 : 2

நடுவணது

காண்க : நடுவண் வி.அ.பெ

949 : 2

நடுவுநிலை

சொந்த விருப்பு வெறுப்பால் ஒரு பக்கமாகச் சாயாமல் மனப்பூர்வமாய் உண்மையை நாடும் மனநிலை பெயர் + ஒ.சொ.நீ

1209 : 2

நடுவுநிலைத் திணையே

(ஐந்திணைகளுள் நடுவில் இருப்பதாகிய) பாலைத் திணை பெயர் + அசை

958 : 1

நடை (1)

இயக்கம் பெயர்

414 : 2, 440 : 2, 1395 : 2, 1574 : 2

நடை (2)

ஒழுக்கம் பெயர்

1040 : 10

நடை (3)

வழக்கம் பெயர்

1040 : 15

நடைத்து

இயக்கத்தை உடையது கு.வி.மு

904 : 1, 1368 : 1 , 2,

நடைத்தே

காண்க நடை (1) கு.வி.மு + அசை

1368 : 1, 2

நடைபயின்று

இயங்கி வி.எ

1392 : 2

நடைபெற்று

நிகழ்ந்து வி.எ

510 : 2, 734 : 2

நடைய

இயக்கத்தை உடையை கு.வி.மு

588 : 2, 903 : 1

நடையினும்

வழக்கும் பெயர் + அசை + எண். உ.

1606 : 3

நடையே

உரைநடை பெயர் + அசை

1432 : 5

நடைவயின்

வழக்கத்தின் கண் பெயர் + வே.உ

1040 : 15

நண்டும்

நீர்வாழ் உயிரினங்களுள் ஒன்று (கர்க்கடகம்) பெயர் + எண்.உ

1533 : 1

நண்ணிய

பொருந்திய பெ.எ

93 : 1

நண்பகல்

உச்சிப் பொழுது பெ.அ.அ. + பெயர்

958 : 1

நந்த

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 12, 1210 : 2

நந்தும் (1)

சங்கும் பெயர் + எண்.உ

1531: 1

நந்தும் (2)

காண்க : நந்து பெயர் + எ.உ.

1566 : 1

நம்

நம் என்னும் சொல் பெயர்

191 : 1, 650 : 4

நம்பும்

'நம்பு' எனும் உரிச்சொல்லும் (விருப்பம்) பெயர் + எண்.உ

813 : 1

நமையும்

நமை என்னும் மரப்பெயரும் (வெக்காலி) பெயர் + எண்.உ

283 : 1

நயத்தில்

இனிய சொற்களால் பெயர் + சா + வே.உ

1186 : 4

நயந்த

விரும்பிய பெ.எ.

1097 : 9

நயந்தோர்

விரும்பினோர் வி.அ.பெ

1097 : 26

நயம் (1)

அன்பு பெயர்

1050 : 2, 1064 : 20, 1073 : 2, 1210 : 2

நயம் (2)

நுட்பம் பெயர்

1224 : 3

நயம்புரி

விரும்புகின்ற வி.தொ.அ.

1064 : 20

நரம்பின்

(இசைக் கருவிகளின் தந்தியில் எழுகின்ற) இசையினுடைய ஆ.பெ. + வே.உ.

33 : 3

நரம்பின் மறைய

இசை நூலிடத்தன கு.வி.மு

33 : 3

நரி

ஒரு வகை விலங்கு பெயர்

15 11 : 1, 1569 : 1

நரியும்

காண்க: நரி பெயர் + எ.உ.

1511 : 1, 1569 : 1

நல்

நல்ல பெ.அ.அ.

484 : 5, 1022 : 15, 1040 : 1, 1041 : 5, 1050 : 2, 1063 : 5, 1064 : 20, 1073 : 2, 1096 : 5, 1097 : 26, 32, 1102 : 1, 1168 : 2, 1169 : 1, 1186 : 4, 1224 : 3, 1263 : 14, 1451 : 2

நல்குரவு

வறுமை பெயர்

1194 : 1

நல்லது

ஏற்புடையது வி.அ.பெ

1614 : 16

நல்லவை

இனியன வி.அ.பெ

1096 : 54, 1103: 2

நல்லிசை நிலையும்

தும்பைத் திணைக்குரிய புறத்துறைகளுள் ஒன்று, போர்க்களத்தில் தன் மன்னன் இறந்ததாற் சினமுற்ற படைத்தலைவன் ஒருவன், நெருங்கிப் போரிட்ட புகழ்மிக்க நிலையைக் கூறுதல்

இ.க.சொ., பெயர் + எண்.உ

1022 : 15

நல்லோள்

மனைவி பெயர்

1029 : 30

நலத்தக

நுட்பமாக வி.எ

1219 : 11

நலம்

நன்மை பெயர்

1096 : 5, 1097 : 36, 1100 : 13

நலன்

அழகு பெயர்

228 : 1

நலனே

காண்க : நலன் பெயர் + எண்.ஏ

1228 : 1

நலிதல்

மெலிதல் தொ.பெ

1209 : 4

நலிபு வண்ணம்

செய்யுளடிகளில் ஆய்த எழுத்து அதிகம் பயின்று வருவதால் தோன்றும் ஓசை இ.க.சொ. பெயர்

1472 : 6, 1482 : 1

நவ்வி

ஒரு வகை மான் பெயர்

1560 : 1

நவ்வியும்

காண்க : நவ்வி பெயர் + எண்.உ

1514 : 1

நவில்

அறிந்த (இளம்., நச்சர்) இயற்றுகின்ற (பேரா)

வி.தொ.அ

1414 : 5

நவிலா

சொல்லப்படாது வி.மு

74 : 1

நவின்று

பயின்று — வி.எ

1395 : 2

நள்

நடு — பெ.அ.அ.

958 : 1

நளி

நளி என்னும் உரிச்சொல் (செறிவு) — பெயர்

807 : 1, 1097 : 10

நளிய

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1235 : 12, 1240 : 2

நளியின்

செறிவிலிருந்து — பெயர் + வே.உ

1097 : 10

நளியும்

நளி என்னும் சொல்லும் (பெருமை) — பெயர் + எண்.உ

804 : 1

நற்பால்

ஏற்புடைய, நல்ல — பெ.அ

1102 : 1

நற்றாய்

பெற்ற தாய் (பெரும்பாலும் தலைவியின் தாய்) — பெயர்

986 : 7, 1451 : 2

நன்கு

நல்லபடி — வி.எ

961 : 3, 1029 : 34

நன்மை

நல்ல தன்மை — பெயர்

563 :3, 986 : 3,

நன்மையும்

காண்க நன்மை — பெயர் + எண். உ.

1000: 3, 1159 : 6

நன்று (1)

நன்று என்னும் சொல் — பெயர்

767 : 1

நன்று (2)

நன்று என்னும் சொல் (பெரிது) — பெயர்

827 : 1

நன்று (3)

நல்லது — கு.வி.மு

1097 : 30

நனவே (நனவு + ஏ)

அவைக்களம் அல்லது அகலமான இடம் என்னும் பொருளைத்தரும் உரிச்சொல் — பெயர் + அசை

860 : 1

நனி (1)

மிகுதி — உ.சொ.

784 : 2, 1029 : 24, 30, 1050 : 2, 1057 : 2, 1096 : 39, 51, 1097 : 12, 1101 : 3, 1219 : 4, 1372 : 3, 1462 : 1

நனி (2)

நன்றாக — வி.அ

880 : 5, 1428 : 4

நனை

மலர் அரும்பு — பெயர்

1591 : 3

நனையே

காண்க : நனை — பெயர் + எண்.ஏ

1591 : 3

நா

நாக்கு — பெயர்

83 : 3, 86 : 4, 89 : 1, 90 : 1, 91 : 1, 93 : 2, 94 : 1, 95 : 1, 96 : 1

நாகு

விலங்கின் பெயர் (பெண் இனம்) — பெயர்

1505 : 2, 1565 : 1, 1566 : 1, 1529 : 2

நாகும்

விலங்கின் பெண்ணும் — பெயர் + எண்.உ

1505 : 2

நாகே

காண்க . நாகு — பெயர் + அசை

1565 : 1, 1566 : 1

நாட்டத்தானும்

ஆராய்ச்சியாலும் — பெயர் + சா. + வே.உ + எண்.உ

1064 : 6

நாட்டத்து (1)

ஆராய்ச்சியால், — பெயர் + வே.உ

484 : 5

நாட்டத்து (2)

நாடுகின்ற காலத்து பெயர் + வே.உ.

1061 : 16

நாட்டம் (1)

ஆராய்ச்சி பெயர்

1073 : 2

நாட்டம் (2)

நிலைபெறுத்தல் தொ.பெ

991 : 24

நாட்டம் (3)

கண்கள் பெயர்

1045 : 1, 1059 : 1

நாட்டல்

நிலைபெறச் செய்தல் தொ.பெ

887 : 5, 1338 : 2, 1470 : 1

நாட்டு

தேசத்தின்கண், வே.அ.

1096 : 45, 1196 : 6

நாட

உவம உருபுகளுள் ஒன்று பெயர்

1235 : 12

நாடகம்

கதை தழுவிய கூத்து பெயர்

1003 : 1

நாடக வழக்கினும்

உலகின் பல காலங்களில் பல இடங்களில் பற்பல நிலையினராக வாழும் மக்களின் காதல் ஒழுக்கத்தில் நல்லனவற்றை ஏற்று அல்லனவற்றைக் களைந்து சுவைபடக் கற்பனை செய்து படைக்கும் இலக்கிய மரபின் கண்ணும் இ.க.சொ., பெயர் + எண்.உ

1003 : 1

நாடி

ஆராய்ந்து வி.எ

83 : 5, 102 : 4, 873 : 2, 1079 : 1, 1265 : 2, 1408 : 2, 1468 : 2, 1502 : 1, 1614 : 23, 25

நாடின்

ஆராய்ந்தால் வி.எ

989 : 9, 1219 : 11, 1249 : 1, 1372 : 1, 1524 : 2, 1557 : 1, 1560 : 2, 1579 : 1, 1612 :1

நாடினர்

ஆராய்ந்து மு.வா.வி.எ

1511 : 1, 1569 : 1

நாடு

தேசம் பெயர்

950 : 3, 1010 : 18, 1064 : 33

நாடுதல்

ஆராய்தல் தொ.பெ

1428 : 4

நாடும் (1)

ஆராயும் பெ.எ

950 : 3, 1030 : 2

நாடும் (2)

தேசமும் பெயர் + எண் உ

1064 : 33

நாண

வெட்கும்படி வி எ.

1026 : 10

நாணல்

வெட்கப்படுதல் தொ.பெ

1209 : 5, 1213 : 2

நாணிய

வெட்கிய பெ.எ

1100 : 14

நாணினும்

வெட்கத்தைக் காட்டிலும் பெயர் + வே.உ + சி. உ

1063 : 1

நாணு

வெட்கம் மு.தொ பெ

1049 : 2, 1057 : 10, 1061 : 5, 1168 : 2

நாணும்

வெட்கமும் பெயர் + எண்.உ

1048 : 1, 1058 : 2, 1150 : 1, 1196 : 3

நாணே (1)

காண்க : நாணு பெயர் + அசை

1063 : 1

நாணே (2)

காண்க : நாணு பெயர் + என்.ஏ

1459 : 1

நாணொடு

காண்க : நாண் — பெயர் + எ. இ.சொ.

1164 : 1

நாப்பண்

நடுவே — இ. சொ.

1374 : 2

நாம் (1)

நாம் என்னும் சொல் — பெயர்

189 : 1

நாம் (2)

உளப்பாட்டுத்தன்மைப் பன்மைப்பெயர் — பெயர்

649 : 5

நாம் (3)

நாம் என்னும் சொல் (அச்சம்) — பெயர்

849 : 1

நாம

அஞ்சுதலையுடைய — வே.தொ.அ.

1096 : 8

நாய்

ஞமலி — பெயர்

1510 : 1, 1513 : 2, 1561 : 1, 1568 : 1

நாயும் (1)

வட்டாட்டக் காய்களும் — பெயர் + எண்.உ

375 : 1

நாயும் (2)

ஞமலியும் — பெயர் + எண்.உ

1568 : 1

நாயே

காண்க நாய் — பெயர் + எண்.ஏ

1510 : 1

நால்

நான்கு — இ.பெ. ஒ. அ.

81 : 1, 346 : 2, 430 : 1, 689 : 4, 887 : 1, 1016 : 1, 1017 : 8, 1018 : 13, 1025 : 6, 1030 : 2, 1061 : 19, 1064 : 45, 1185 : 4, 1194 : 2, 1198 : 2, 1199 : 1, 1228 : 2, 1242 : 1, 1263 : 10, 1293 : 1, 1297 : 1, 1299 : 2, 1339 : 4, 1340 : 2, 1348 : 2, 1365 : 2, 1369 : 1, 1390 : 2, 1393 : 1, 1400 : 3, 1421 : 2, 1445 : 3, 1600 : 1

நால்வர்க்கும் (1)

அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் (இளம்) அந்தணர்க்கும் அரசர்க்கும் இருவகை வேளாளர்க்கும் (நச்சர்) தொ.கு.பெ + வே.உ + மு.உ

978 : 1

நால்வர்க்கும் (2)

தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய பெண்கள் நான்கு பேர் (இளம்) தோழி, செவிலி நற்றாய், பாங்கன் ஆகியோர் (நச்சர்) கு.வி.அ.பெ. + வே.உ + அசை

1149 : 1, 1150 : 2

நால்வர்க்கும் (3)

நான்கு வருணத்தாருக்கும் — தொ.கு.பெ. + வே.உ + மு.உ

1173 : 1

நாலிரண்டு (1)

4 x 2 = 8 எட்டு — பெயர்

1030 : 2, 1199 : 1, 1242 : 1

நாலிரண்டு (2)

4 x 2 எட்டு — இ.பெ.ஒ.அ

1017 : 8, 1025 : 6

நாலிரு

4 x 2 (எட்டு) — இ.பெ.ஒ.அ.

1017 : 8, 1025 : 6

நாலீரைம்பது

4 x 2 x 50 x 400 நானூறு — பெ.அ.

1421 : 2

நாலெட்டு

4 x 8 = 32 முப்பத்திரண்டு — இ.பெ.ஒ.அ

1064 : 45

நாலைந்து

4 x 5 = 20 இருபது — பெ.ப

1471 : 1

நாலைந்தும்

இருபதும் — பெயர் + மு.உ

695 : 2, 1263 : 10

நாவும்

நாக்கும் — பெயர். + எண்.உ

83 : 3

நாவே

காண்க : நாவும் — பெயர். + எண். ஏ.

1529 : 2

நாழி

நாழி என்னும் சொல் (ஓர் அளவுப் பெயர்) பெயர்

241 : 1

நாள் (1)

விண்மீனின் பெயராகிய சொல் — ஆ.பெ

125 : 2, 248 : 1

நாள் (2)

விண்மீன் — பெயர்

332 : 1

நாள் (3)

(தினம்) நல்ல நாள், தீய நாள், (இளம்) — பெயர்

1040 : 8, 1040 : 17

நாள் (4)

தினம் — பெயர்

1040 : 7, 1062 : 2, 1072 : 1,2, 1137 : 1

நாள்கோள்

ஒரு பயனை நாடிப் பயணம் செல்லும் போது நல்ல நேரம் பார்த்து பயணத்திற்கு அவசியமான பொருள் ஒன்றை வேற்றிடத்தில் வைத்தல்; இது பரஸ்தானம் என்றும் பலஸ்தானம் என்றும் கூறப்படும். போருக்குச்செல்லும் மன்னர் தம் குடையையும், வாளையும் பரஸ்தானம் செய்ய நாளைக் கொள்ளுகையாம் — வே.தொ

1018 : 1

நாள்முன்

நாட்பெயருக்கு முன்னால் — ஆ.பெ + வே.உ

125 : 2, 248 : 1

நாள்வயின்

தினத்தில் — பெயர் + வே.உ

1040 : 8

நாளதுசின்மை

வாழுகின்ற நாட்களின் குறைவு, — பெயர் + வே.உ

991 : 7

நாளிடை

தினத்தில் — பெயர் + வே.உ

1062 : 2

நாளினில்

நாளில் — பெயர் + சா. + வே.உ

1040 : 7

நாளும் (1)

விண்மீனின் பெயரும் — ஆ.பெ + எண்.உ

287 : 1

நாளும் (2)

விண்மீனும் — பெயர் + எண்.உ

1040 : 17, 1085 : 1

நாளும் (3)

தினங்களும் — பெயர் + அ.ச

1137 : 1

நாற்றம்

மணம் — பெயர்

563 : 7

நாற்றமும்

உடல் வாசனை (பூவினாலும், சாந்தினாலும் தலைவன் மாட்டுளதாகிய கலவியால் தலைவி மாட்டு நாறுதல் (இளம்) — பெயர் + எண்.உ

1064 : 1

நான்கண்

நான்காவதனுடைய — ஆ.பெ + வே.அ

124 : 1, 162 : 1, 443 : 1, 454 : 1, 468 : 1, 596 : 8

நான்கு (1)

4 — பெ.அ

63 : 1, 104 : 3, 1051 : 6, 1064 : 13, 1529 : 4, 1533 : 1

நான்கு (2)

நான்காம் வேற்றுமை — ஆ.பெ.

560 : 1

நான்கு (3)

4 — பெயர்

615 : 1, 662 : 3, 663 : 4, 664 : 3, 665 : 5, 690 : 2, 888 : 2, 902 : 5, 907 : 1, 1198 : 1, 2, 1201 : 2, 1432 : 5

நான்கு (4)

நான்காவது மெய்ப்பாட்டு நிலை — ஆ.பெ.

1213 : 4

நான்கும் (1)

நான்கு என்னும் சொல்லும் — பெயர் + எண்.உ

457 : 1, 463 : 1

நான்கும் (2)

(கூறப் பெற்ற) நான்கு பொருள்களும் — பெயர் + மு.உ

692 : 1, 814 : 2, 833 : 2, 1001 : 4, 1002 : 1, 1039 : 11, 1055 : 1, 1381 : 2, 1508 : 2, 1510 : 1, 1541 : 2

நான்கும் (3)

நான்கு அடிகளும் — பெயர் + எண்.உ

1401 : 2

நான்கே (1)

நான்கு (வகை) — பெயர் + தே.ஏ

109 : 9, 1220 : 5, 1225 : 1

நான்கே (2)

காண்க : நான்கு — பெயர் + அசை

607 : 3, 662 : 2, 2, 739 : 2, 1202 : 2, 1203 : 2, 1204 : 2, 1205 : 2, 1206 : 2, 1207 : 2, 1208 : 2, 1210 : 3, 1211 : 3, 1212 : 3, 1213 : 4, 1214 : 3, 1215 : 3

நான் மூன்றே

4 x 3 = 12 பன்னிரண்டு — இ.பெ.ஒ + அசை

10 18 : 13

நானான்கு

4 x 4 = 16 பதினாறு — பெ.ப

1198 : 2

நிகர்

ஒப்பன — கு.வி.மு

1519 : 1

நிகர்த்து

ஒத்து — வி.எ

1029 : 14

நிகர்ப்ப

உவம உருபுகளுள் ஒன்று — பெயர்

1235 : 6, 1239 : 2

நிகரலும்

ஒத்தலும் — தொ.பெ. + எதி.உ

481 : 3

நிகழ்

இயங்குகின்ற — வி.தொ.அ

1177 : 1

நிகழ்ச்சி (1)

சம்பவம் — பெயர்

1460 : 2, 1596 : 2

நிகழ்ச்சி (2)

தொழில் — பெயர்

1583 : 2

நிகழ்த்துப

கூறுவார்கள் — வி.மு

1578 : 2

நிகழ்ந்த

நடைபெற்ற — பெ.எ

1096 : 18

நிகழ்ந்தது

நடைபெற்றது — வி.அ.பெ

993 : 1, 994 : 1

நிகழ்ந்தவை

நடைபெற்றவை — வி.அ.பெ

1061 : 16

நிகழ்பவை

நடைபெறுபவை — வி.அ.பெ

1051 : 8

நிகழ்வின்

நிகழ்காலம் — பெயர் + அசை

687 : 1, 911 : 1

நிகழ்வினும்

காண்க : நிகழ்வு — பெயர் + சா + எண்.உ

730 : 2, 1103 :1

நிகழ்வு (1)

செயல் — பெயர்

1461 : 3

நிகழ்வு (2)

நிகழ்காலம் — பெயர்

687 : 1, 730 : 2, 1103 : 1

நிகழ்வே

நிகழ்காலம் — பெயர் + எண்.ஏ

1461 : 1

நிகழ நின்றவை

ஏற்படுகின்றதை (ஐயத்தை) — வி.அ.பெ; + வே.உ.

1044 : 4

நிகழுங்காலத்து

நிகழ் காலத்தில் — பெயர் + வே.அ.

712 : 2, 725 : 2, 727 : 3

நிகழுங்காலத்தும்

நிகழ்காலத்திலும் — பெயர் + வேஉ. + எண்.உ

726 : 1

நிகழுங்காலமொடு

நிகழ்காலமொடு — பெயர் + வே.உ

921 : 2

நிகழும் (1)

நடைபெறுகின்ற — பெ.எ

712 : 2, 725 : 2, 726 : 1, 727 : 3, 921 : 2, 1064 : 19, 1100 : 27

நிகழும் (2)

நடைபெறும் — வி.மு

1046 : 2, 1050 : 5, 1099 : 2, 1185 : 4

நிகழுமாறு

நடக்கும்படி, நடைபெறும்படி — வி.எ

1100 : 27

நிகழூஉநின்ற

நிகழ் காலத்தை உணர நின்ற — பெ.எ

660 : 1

நிச்சமும்

நாள் தோறும் (இளம்), எந்நாளும் (நச்சர்) — பெயர் + மு.உ

1048 : 2

நிம்பிரி

பொறாமை — பெயர்

1194 : 1, 1223 : 1

நிமித்தம் (1)

காரணம் — பெயர்

963 : 2, 1216 : 2

நிமித்தம் (2)

சகுனம் — பெயர்

986 : 2, 10140 : 17, 1127 : 3

நிமித்தம் (3)

துணையாகக் கூடும் கூட்டம் — ஆ.பெ

1053 : 1

நிமித்தமும்

சகுனமும் — பெயர் + எண்.உ

1040 : 17

நிமிர்

மிகுகின்ற — வி.தொ.அ

1441 : 1

நிமிர்ந்து

மிகுந்து — வி.எ

1409 : 4, 1497 : 2

நிமிர்வு

மிகுதல் — பெயர்

1494 : 3

நிரம்ப (1)

(கருத்து) தெளிவாகும் படி — வி.எ

1051 : 12, 1524 :2

நிரம்ப (2)

முற்றிலுமாக — வி.எ.

1186 : 2

நிரல்

வரிசை — பெயர்

888 : 1, 889 : 2, 1262 : 2, 2, 1351 : 1, 1429 : 1

நிரல்பட

வரிசையாக — வி.எ

1429 : 1

நிரனிறை (1)

பொருள் கோள் நான்கனுள் ஒன்று, அது நிறுத்த முறையிலேயே சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல், — இ.க.சொ; பெயர்

881 : 1, 889 : 2

நிரனிறை (2)

அணிகளுள் ஒன்றாகவும் இதனைக் கூறுவர் — பெயர்

881 :, 889 : 2, 1262 : 2

நிரை

அசைகளுள் ஒன்றாகிய நிரையசை, அது குறலிணை அல்லது குறில் நெடில் தனித்தோ ஒரிரு ஒற்றடுத்தோ வருவது — இ.க.சொ., பெயர்

1265 : 3, 1275 : 1, 1277 : 2, 1290 : 1, 1320 : 1, 1334 : 1, 1335 : 1

நிரைபும்

உகரம் சேர்ந்த நிரையசை — இ.க.சொ. பெயர் + எண். உ.

1266 : 2, 1334 : 1

நிரையசை

காண்க : நிரை — பெயர்

1277 : 2, 1290 : 1

நிரையும்

நிரையசையும் — பெயர் + எண். உ.

1265 : 3, 1334 : 1

நில்லா

நிலையற்ற — எ.பெ.எ.

1028 : 2

நில்லாது

நிலைபெறாது — வி.மு

528 : 2

நிலத்தான

பூமியின் கண் பெயர் + சா + வே.உ + அசை

584 : 2

நிலத்தின்

பூமியின் பெயர் + சா. + வே.அ.

566 : 3, 968 : 3

நிலத்தினானும்

பூமியினாலும் பெயர் + சா + வே.உ + சா. + எண்.உ

700 : 2

நிலத்து (1)

நிலப்பகுதி பெயர் + வே.அ.

683 : 3, 882 : 3

நிலத்து (2)

நிலையின் கண் பெயர் + வே.அ

1423 : 1

நிலத்தும் (1)

பூமியின் கண்ணும் பெயர் + வே.உ. + மு.உ

884 : 1

நிலத்தும் (2)

நிலையின் கண்ணும் பெயர் + வே.அ. + மு.உ.

1339 : 2

நிலத்தே

நிலையை உடையது கு.வி.மு + அசை

1297 : 2

நிலம் (1)

பூமி பெயர்

584 : 2, 652 : 1, 951 : 1, 968 : 1, 2, 1021 : 3, 119 : 1, 1173 : 2, 1251 : 1, 1593 : 1

நிலம் (2)

வகை பெயர்

1056 : 2

நிலம் (3)

இடம் பெயர்

997 : 1

நிலவுதல்

மொழியில் வழங்கப்படுதல் தொ.பெ

589 : 2

நிலன்

நிலம் (பூமி) பெயர்

598 : 2, 719 : 1, 961 : 1

நிலனும்

காண்க : நிலன் பெயர் + எண். உ.

719 : 1

நிலனே

காண்க : நிலன் பெயர் + எண்.ஏ

598 : 2

நிலா

நிலா என்னும் சொல் (மதி, சந்திரன்) பெயர்

229 : 1

நிலை (1)

நிலைமை பெயர்

30 : 1, 35 : 1, 45 : 3, 47 : 2, 84 : 2, 108 : 7, 112 : 2, 118 : 2, 163 : 1, 204 : 1, 211 : 2, 220 : 1, 236 : 1, 248 : 1, 257 : 1, 281 : 1, 286 : 2, 296 : 1, 3, 316 : 3, 321 : 2, 332 : 2, 341 : 2, 360 : 1, 390 : 3, 400 : 1, 419 : 1, 430 : 1, 460 : 1, 471 : 1, 480 : 1, 483 : 1, 483 : 11, 488 : 2, 3, 496 : 1, 499 : 1, 501 : 2, 525 : 1,546 : 2, 551 : 2, 554 : 1, 555 : 1, 2, 571 : 1, 2, 581 : 2, 593 : 2, 638 : 3, 4, 641 : 3, 651 : 1, 2, 652 : 3, 4, 5, 655 : 5, 658 : 1, 673 : 1, 678 : 1, 687 : 3, 721 : 2, 725 : 1, 3, 735 : 2, 2, 740 : 2, 741 : 2, 749 : 2, 760 : 3, 778 : 1, 874 : 1, 2, 891 : 1, 2, 893 : 2, 895 : 4, 933 : 1, 2, 4, 935 : 2, 945 : 1, 946: 2, 958 : 1, 961 : 1, 971 : 2, 989 : 1, 5, 990 : 7, 995 : 1, 1009 : 1, 1021 : 3, 1025 : 8, 1050 : 3, 4, 1064 : 5, 19. 31, 1078: 2, 1096 : 52, 1117 : 2, 1118 : 5, 1119 : 1, 1127 : 1, 1, 1163 : 1, 1165 : 1, 1288 : 1, 1292 : 1, 1302 : 1, 1303 : 1, 1304 : 1, 1314 : 1, 1315 : 1, 1317 : 2, 1320 : 2, 1321 : 1, 1364 : 1, 1366 : 1, 1370 : 4, 1397 : 2, 1419 : 3,. 1420 : 1, 1434 : 2, 1462 : 2, 1470 : 2, 2. 1594 : 1, 1595 : 1, 1597 : 1

நிலை (2)

நிற்கின்ற வி.தொ.அ

174 : 2, 233 : 1, 252 : 2,431 : 3, 440 : 1, 472 : 2, 479 : 1, 3, 480 : 2, 782 : 7, 902 : 5, 1414 : 4

நிலை (3)

நிலைத்தல் மு.தொ.பெ.

68 : 2, 285 : 2, 425: 1, 722 : 2, 768 : 2, 942 : 1, 1284 : 2, 1392 : 1, 1394 : 1, 1420 : 2

நிலை (4)

நிலைத்திருத்தல் மு.தொ.பெ

285 : 2, 811 : 1

நிலை (5)

நிற்கும் எழுத்து ஆ.பெ

316 : 2, 456 : 3, 458 :1, 466 : 1

நிலை (6)

நிற்கும் சொல் — ஆ.பெ

464 : 1, 715 : 2, 1523 : 1

நிலை (7)

நிற்கும் பருவம் — ஆ.பெ

958 : 2

நிலைஇ

நின்று — வி.எ

83 : 2, 327 : 3, 889 : 4, 1032 : 1, 1096 : 6

நிலைஇய

நின்ற — பெ.எ

122 : 1, 142 : 2, 1061 : 30

நிலைக்களம்

நிலையான இடம் — இ பெ. ஒ

1228 : 2

நிலைக்கு

நிற்பதற்கு — மு.தொ.பெ. + வே.உ.

111 : 2, 735 : 2, 1169 : 2, 1286 : 2, 1322 : 2

நிலைத்து

நிலைமையை உடையது — கு.வி.மு.

673 : 2

நிலைத்தே

நிற்கும்சொல் — கு.வி.மு. + அசை

122 : 2, 743 : 3, 900 : 4

நிலைபுரிந்த

தோன்றிய — பெ.எ.

1260 : 2

நிலைபெற

நிற்க — வி.எ.

512 : 2, 960 : 1, 1288 : 2

நிலைபெறவே

நிற்கவே — வி.எ. + அசை

1288 : 2

நிலைபெறு வழியும்

நிலைக்கும்போதும் — வி.எ. + எண்.உ.

133 : 2

நிலைமை

தன்மை — பெயர்

973 : 2

நிலைமைக்கு

தன்மைக்கு — பெயர் + வே.உ.

1382 : 2, 1578 : 2

நிலைமைத்து

தன்மையை உடையது — கு.வி.மு.

1381 : 3, 1401 : 3

நிலைமையில்

தன்மையின்கண் — பெயர் + வே.உ.

1076 : 1

நிலைமையும்

தன்மையும் — பெயர் + சி.உ.

1051 : 19

நிலைமொழி

சொற்புணர்ச்சியில் முதலில் நிற்கும்சொல் — இ.க.சொ., பெயர்

174 : 2

நிலைய

தன்மையை உடையன — கு.வி.மு.

159 : 2

நிலையல்

நிற்றல் — தொ.பெ.

15 : 1, 105 : 2, 243 : 2, 553 : 2, 889 : 4

நிலையலும் (1)

நிற்றலும் — பெயர் + எண்.உ.

158 : 6, 9, 401 : 2, 644 : 1, 736 : 3, 902 : 2, 2, 3, 4

நிலையலும் (2)

காண்க : நிலையல் — பெயர் + எதி.உ.

309 : 2, 317 : 2, 410 : 2

நிலையலும் (3)

காண்க : நிலையல் — பெயர் + எ. உ.

370 : 1, 400 : 1, 994 : 1

நிலையா

நிற்காது — எ.வி.மு.

323 : 3

நிலையாது

நிற்காது — எ.வி.எ.

902 : 4

நிலையான்

இடங்களான் (இளம்) தன்மையான் (நச்சர்) — பெயர் + வே.உ.

83 : 4

நிலையானும்

நிற்றலானும் தொ.பெ. + வே.உ. + எண்.உ.

717 : 2

நிலையிடை

நிலைமைக்கண் பெயர் + வே.உ.

35 : 1, 483 : 11, 735 : 2

நிலையில்

நிலைமையுடைய பெயர் + வே.உ.

1146 : 1

நிலையிற்று

நிலைத்தது வி.மு.

1549 : 1

நிலையின்

நிலைமை பெயர் + அசை

565 : 5

நிலையின்கண்ணும்

நிலைமையிடத்தும் பெயர் + சா + வே.உ. + எண்.உ.

1096 : 42

நிலையின்மை

நீடித்து நிற்காத தன்மை பெயர்

811 : 1

நிலையின

தன்மையை உடையன வி.அ.பெ.

100 : 2, 541 : 9

நிலையினும் (1)

நிற்பினும் வி.எ. + எ.உ.

778 : 1

நிலையினும் (2)

தன்மையிலும் பெயர் + வே.உ. + எண்.உ.

1097 : 41, 1469 : 1

நிலையும் (1)

நிற்கும் வி.மு.

12 : 1, 76 : 2, 128 : 1, 162 : 3, 190 : 3, 192 : 5, 221 : 1, 254 : 1, 264 : 1, 282 : 1, 288 : 1, 298 : 1, 300 : 1, 310 : 1, 321 : 3, 323 : 2, 325 : 1, 348 : 2, 353 : 1, 375 : 3, 378 : 1, 379 : 2, 389 : 1, 394 : 2, 403 : 1, 420 : 1, 423 : 2, 482 : 4, 912 : 1, 1140 : 1, 1520 : 1

நிலையும் (2)

நிலைமையும் பெயர் + எண்.உ.

113 : 1, 2, 292 : 1, 1022 : 2, 1097 : 10

நிலையும் (3)

நிற்கின்ற பெ.எ.

203 : 4, 295 : 1, 335 : 2, 438 : 3, 587 : 3, 728 : 2, 766 : 2, 3

நிலையே

தன்மை பெயர் + அசை

18 : 1, 25 : 2, 117 : 1, 172 : 4, 452 : 2, 537 : 4, 550 : 2, 598 : 5, 644 : 2, 663 : 4, 664 : 3, 666 : 2, 667 : 2, 668 : 2, 670 : 2, 895 : 4, 1136 : 1

நிலையொடு

தன்மையொடு பெயர் + வே.உ.

1029 : 17

நிழல்

நீழல் பெயர்

1040 : 10

நிழலின்

பிம்பத்தைப்போல பெயர் + உ.உ.

1428 : 3

நிற்கவும்

நிலைக்கவும் வி.எ. + எதி. உ.

1271 : 2

நிற்கும் (1)

நிலைபெறும் பெ.எ.

1155 : 1

நிற்கும் (2)

நிலைபெறும் வி.மு.

1330 : 1

நிற்குவதாயின்

நிலைபெறின் வி.எ.

1288 : 1

நிற்ப

நிற்க வி.எ.

286 : 1

நிற்பவும்

நிலைப்பனவும் வி.அ.பெ. + எதி. உ.

1322 : 2

நிற்பவை

(நிகழ உள்ள) இல்லற வினை (இளம்) (நிலைத்துள்ள) நல்ல பண்புகள் (நச்சர்) வி.அ.பெ.

1051 : 8

நிற்பின்

இருந்தால் — வி.எ.

1276 : 1, 1280 : 1, 1335 : 1

நிற்றல்

நிலைத்தல் — தொ.பெ.

27 : 2, 34 : 1, 123 : 2, 192 : 3, 268 : 2, 327 : 4, 391 : 2, 446 : 4, 1154 : 3, 1219 : 3, 1221 : 4, 1270 : 2, 1467 : 4, 1608 : 5

நிற்றற்கண்ணும்

காண்க : நிற்றல் — பெயர் + வே.உ. + எண்.உ.

1065 : 9

நிற்றற்கும்

நிற்பதற்கும் — பெயர் + வே.உ. + எ. உ.

1380 : 3

நிற்றலின்

நிற்பதால் — பெயர் + வே.உ.

1105 : 2

நிற்றலும்

நிற்பதும் — பெயர் + எ.உ.

178 : 2, 345 : 1, 351 : 2

நிற

நிறத்தை உடைய — பெ.அ.

1571 : 6

நிறத்து

வண்ணத்தில் — பெயர் + வே.உ.

857 : 1

நிறன்

வண்ணம் (நிறம்) — பெயர்

786 : 1, 791 : 1

நிறீஇ

நிறுத்தி — வி.எ.

1146 : 9

நிறுத்த

நிறுத்தப்பெற்ற — பெ.எ.

108 : 6, 109 : 2, 111 : 1, 1222 : 2

நிறுத்தசொல்

நிலைமொழி — பெயர்

108 : 6, 109 : 2, 111 : 1

நிறுத்த சொல்லின்

நிலைமொழியின் — பெ.எ. + பெயர் + வே.அ.

109 : 2

நிறுத்தசொல்லும்

நிலைமொழியும் — பெ.எ.தொ. + எண்.உ.

111 : 1

நிறுத்தசொல்லே

காண்க : நிறுத்த — பெ.எ.தொ. + எண்.ஏ.

108 : 6

நிறுத்தல் (1)

ஆதரித்தல், — தொ.பெ.

1097 : 2

நிறுத்தல் (2)

மேற்செல்லாமல் தடுத்தல் — தொ.பெ.

1186 : 2

நிறுத்தல் (3)

நிற்கச் செய்தல் — தொ.பெ.

1220 : 1, 1614 : 3

நிறுத்தலின்

எடைபோடுதல் — தொ.பெ.+ அசை

557 : 6

நிறுத்தலும் (1)

நிற்கச்செய்தலும் — தொ.பெ. + எ.உ.

1105 : 1

நிறுத்தலும் (2)

நிலைபெறச் செய்தலும் — தொ.பெ. + எண்.உ.

1118 : 3

நிறுத்தற்கண்ணும்

ஆதரிக்கும்போதும் — பெயர் + வே.உ. + எண்.உ.

1097 : 2

நிறுத்து (1)

உறுதியாக — வி.எ.

1064 : 11

நிறுத்து (2)

நிற்கச் செய்து — வி.எ.

1262 : 2, 1351 : 1

நிறை (1)

அடக்கம், மறைபிறர் அறியாமை, மனத்திண்மை, நெஞ்சை நிறுத்தல் (நச்சர்) — பெயர்

1222 : 3

நிறை (2)

எடை — வே.அ.

900 : 2

நிறை (3)

முழுமையான பெ.அ.

938 : 1

நிறை (4)

ஒப்பு பெயர்

1029 : 36

நிறை (5)

மனத்திண்மை பெயர்

1096 : 33

நிறை (6)

(சொற்பயன்) நிறைவேறுகின்ற வி.தொ.அ.

1437 : 1

நிறைக்கும்

முழுமையாக்கும் வி.மு.

41 : 1

நிறைந்த

மிகுதியான பெ.எ.

1061 : 2

நிறைந்து

மிகுதி வி.எ.

839 : 1

நிறைபு

நிறைவு பெயர்

44 : 1

நிறைய (1)

மிகுதியாக வி.எ.

167 : 2

நிறைய (2)

முழுமையாக வி.எ.

1288 : 1

நிறையவும்

மிகுதியாகவும் வி.எ. + எ.உ.

1330 : 1

நிறையிற்கும்

எடைக்கும் பெயர் + சா + வே.உ. + எ.உ.

171 : 1

நிறையின்

எடையின் பெயர் + வே.உ.

447 : 1

நிறையும் (1)

எடையும் (எடைப்பெயரும்) பெயர் + எ.உ.

165 : 2, 170 : 1, 320 : 1, 390 : 1, 437 : 1, 475 : 1, 478 : 1, 603 : 1

நிறையும் (2)

மனத்திண்மையும் பெயர் + எ.உ.

1102 : 2

நிறையே

காண்க : நிறை பெயர் + எண்.ஏ.

1222 : 3

நிறைவு

மிகுதி பெயர்

816 : 1

நிறைவும்

மன அமைதியும் பெயர் + எண். உ.

1158 : 1

நின்ற

நிலைகொண்ட பெ.எ.

145 : 4, 148 : 2, 238 : 2, 327 : 2, 438 : 2, 476 : 3, 631 : 2, 707 : 4, 1021 : 2

நின்றசொல்

நிலைமொழி பெ.எ.தொ.

145 : 4

நின்றவழி

நிலைகொண்டபோது வி.எ.

909 : 4

நின்றாங்கு

இருந்தபடி வி.எ.

543 : 1

நின்று (1)

நிலைபெற்று வி.எ.

41 : 1, 104 : 3, 133 : 6, 484 : 2, 568 : 2, 771 : 1, 901 : 4, 1100 : 19, 21, 29, 1425 : 5

நின்று (2)

இருந்து வி.எ.

1058 : 1

நின்று (3)

நிலைபெற்ற (இளம்) பெ.எ., ஓர் இடத்தில் தங்கி (நச்சர்) வி.எ.

1096 : 39

நின்றை

நின்றை என்னும் சொல் பெயர்

910 : 1

நினைஇ

நினைத்து வி.எ.

1051 : 8

நினைத்தல்

கருதுதல், எண்ணுதல் தொ.பெ.

1061 : 13

நினைத்தற்கு

கருதுதற்கு, எண்ணுதற்கு தொ.பெ. + வே.உ.

993 : 1

நினைதல்

கருதுதல், எண்ணுதல் தொ.பெ.

1209 : 6

நினைந்து

எண்ணி வி.எ.

1051 : 3

நினைய

கருத வி.எ.

633 : 2, 780 : 3, 889 : 3, 916 : 2

நினையல்

கருதுதல் தொ.பெ.

778 : 2

நினையும்

கருதும் பெ.எ.

170 : 2, 266 : 2, 284 : 2, 539 : 2, 659 : 3, 685 : 2, 1176 : 2, 1455 : 2

நினைவும்

சிந்தனையும் பெயர் + எண்.உ.

821 : 1

நீ (1)

நீ என்னும் சொல் பெயர்

180 : 1, 251 : 1, 254 : 1, 661 : 3, 675 : 1, 676 : 2

நீ (2)

நீ (முன்னிலை ஒருமைச்சுட்டு) சு.பெ.

1096 : 12, 1159 : 4

நீக்கலின்

விட்டுப் பிரிதலால் தொ.பெ. + வே.உ.

989 : 3, 1051 : 19

நீக்கி

அகற்றி வி.எ.

1040 : 7, 1186 : 2, 1608 : 3

நீக்கிய

அகற்றிய பெ.எ.

1096 : 38, 1097 : 10

நீங்கிய

பிரிந்த, அகன்ற பெ.எ.

1097 : 27, 1598 : 1

நீங்கின்

பிரிந்தால், அகன்றால் வி.எ.

140 : 1

நீங்கு

அகன்ற, பிரிந்த வி.தொ.அ.

1037 : 2

நீட்டம்

(உச்சரிப்பு மூலம்) எழுத்தின் மாத்திரை அதிகரிப்பு பெயர்

6 : 1, 213 : 1, 631 : 2, 640 : 1

நீட்டமும்

மாத்திரை அதிகரிப்பும் பெயர் + எ.உ.

213 : 1

நீட்டலும்

எழுத்தின் மாத்திரையை உச்சரிப்பால் அதிகரித்தலும் தொ.பெ. + எண்.உ.

887 : 4

நீட்டும்வழி

மாத்திரை அதிகரிக்கும்போது வி.எ.

887 : 4

நீட வருதல்

குறில் நெடிலாகி வருதல் தொ.பெ.

209 : 1

நீடல்

நீளுதல் தொ.பெ.

331 : 1, 312 : 1, 456 : 3, 458 : 1

நீடலும் (1)

காண்க : நீடல் தொ.பெ. + எண்.உ.

33 : 1

நீடலும் (2)

காண்க : நீடல் தொ.பெ. + எதி.உ.

312 : 2

நீடலும் (3)

காண்க : நீடல் தொ.பெ. + எ.உ.

458 : 1

நீடிய

நீண்ட பெ.எ.

160 : 3, 428 : 1

நீடினும் (1)

நீண்டாலும் (நீண்டு உச்சரிக்கப்பட்டாலும்) வி.எ. + எ. உ.

466 : 1

நீடினும் (2)

தொடர்ந்தாலும் வி.எ. + எண்.உ.

1061 : 8

நீடு (1)

நீள்கின்ற வி.தொ.அ.

214 : 1, 262 : 1

நீடு (2)

காலம்நீளுதல் மு.தொ.பெ.

1051 : 3

நீடு நினைந்திரங்கல்

ஓர் அகத்துறை, அது தலைவியை அணையப் பெறாமல் காலம் வீணாகக் கழிவதை எண்ணித் தலைவன் வருந்துதல். இ.க.சொ., பெயர்

1051 : 3

நீடும்மே

நீளும் வி.மு. + அசை

459 : 1

நீத்த (1)

துறந்த பெ.எ.

1026 : 1, 1100 : 27, 1208 : 2

நீத்த (2)

இறந்த பெ.எ.

1029 : 12

நீத்து

துறந்து வி.எ.

1137 : 2

நீயிர்

நீயிர் என்னும் சொல் பெயர்

661 : 3, 675 : 1

நீர் (1)

நீர்நிலை ஆ.பெ.

1018 : 7, 1545 : 1, 1566 : 1

நீர் (2)

தண்ணீர் பெயர்

1068 : 4, 1593 : 1

நீர் (3)

பண்பு பெயர்

1068 : 3

நீர்ச்செரு

இது புறத்திணைகளுள் உழிஞைத்திணையின் துறைகளுள் ஒன்று. நீர்ச்செரு வீழ்ந்த பாசி என்று இத்துறை அழைக்கப்படும். அஃதாவது கோட்டையின் அகழியைத் தாண்டி உள்ளே நுழைய முயலும் புறப்படையும், அதனைத் தடுக்கும் கோட்டைக்குரிய அகப்படையும் அந்த அகழியைச் சூழ்ந்து புரியும்போர். இ.க.சொ., வே.தொ..

1018 : 7

நீர்ப்படை

வெட்சித் திணைப் புறத்துறைகளுள் ஒன்று, அது போரில் இறந்தபட்டோனது நடுகல்லை வழிபடு முகத்தான் நீராட்டுதல். இ.க.சொ., பெயர்

1010 : 19

நீரில்

தன்மையால் பெயர் + வே.உ.

1051 : 12

நு

நு என்னும் எழுத்து பெயர்

641 : 1, 894 : 1

நுகர்ச்சி

துய்ப்பு பெயர்

1051 : 4, 1118 : 1

நுகர்தலும்

துய்த்தலும் தொ.பெ. + எதி.உ.

1141 : 2

நுகர்வும்

நுகர்ச்சியும் பெயர் + எண். உ.

1196 : 4

நுண்ணிதின்

நுட்பமாக வி.எ.

7 : 2, 1425 : 6

நுண்மை

நுட்பம் — பெயர்

858 : 1, 1436 : 1, 1604 : 4

நுண்மையும்

நுண்மையான பொருளும் — பெயர் + எண்.உ.

1436 : 1

நுண்மையொடு

நுண்ணிய பொருண்மையொடு — பெயர் + வே.உ.

1604 : 4

நுணங்கு

நுட்பமான — வி.தொ.அ.

1602 : 5

நுணங்கும்

நுணங்கு என்னும் சொல்லும் — பெயர் + எண்.உ.

858 : 1

நுணுக்கம்

நுட்பம் — பெயர்

814 : 2

நுதல் (1)

கூறுதலை (உடைய) — மு.தொ.பெ., வே.அ.

894 : 2

நுதல் (2)

நெற்றி — பெயர்

1210 : 1

நுதலி

கூறி — வி.எ.

899 : 2

நுதலிய

கூறிய — பெ.எ.

175 : 1, 673 : 2, 1004 : 1, 1026 : 17, 1230 : 2, 1413 : 1, 1427 : 1, 1436 : 4, 1459 : 4, 1597 : 3

நுதலியது

கூறப்பட்டது — வி.அ.பெ.

1614 : 2

நும்

நும் என்னும் சொல் — பெயர்

163 : 1, 188 : 1, 192 : 7, 326 : 1

நும்மின்

காண்க : நும் — பெயர் + வே.அ.

630 : 1

நுவல் வழித்தோற்றம்

வெட்சிப் புறத்துறைகளுள் ஒன்று, அது பகைவர்களின் ஆநிரைகளைக் கவரச் சென்ற வெட்சிமறவர்கள், தம் ஊரார் புகழும்படியாக நிரைகளைக் கவர்ந்து ஊர் எல்லையின்கண் வருதல் — இ.க.சொ., பெயர்

1008 : 6

நுவலாது

சொல்லாமல் — வி.எ.

103 : 1

நுவலினும்

கூறினாலும் — வி.எ. + எண்.உ.

1497 : 1

நுவலும்

சொல்கின்ற — பெ.எ.

575 : 2, 601 : 4, 735 : 9, 950 : 2, 1425 : 2

நுவன்றிசினே

கூறினேன் — வி.மு. + அசை

103 : 2

நுவன்று

கூறி — வி.எ.

1414 : 5

நுழைவும்

நுழைவு என்றும் சொல்லும் (நுண்மை) பெயர் + எண்.உ

858 : 1

நுனி (1)

இறுதிப்பகுதி — பெயர்

91 : 1, 93 : 2, 94 : 1, 95 : 1

நுனி (2)

நுண்மை — பெயர்

1614 : 28

நூல் (1)

(யாப்பு வகைகளுள் ஒன்று) நூல் யாப்பு — பெயர்

1339 : 1

நூல் (2)

இலக்கணம். பஞ்சிலிருந்து இழையை உருவாக்குதல் போலச் சொற்களிலிருந்து இலக்கணத்தை உருவாக்குவதால் உவம ஆகுபெயர் என்பார் நச்சர். தம் நூன்மரபுத் தோற்றுவாயில். "எடுத்துக் கொண்டு பொருளொடு முடிக்கும் பொருண்மை மாறுபடாமற் கருதிய பொருளைத் தொகையானும் வகையானுங் காட்டியதகைத்து

நின்று விரிந்தவுரையோடு பொருத்தமுடைத்தாகி நுண்ணியதாகி விளக்குவது நூல்" (இளம்)
இ.க.சொ.பெயர்

947 : 3, 1414 : 5, 1424 : 2, 1425 : 2

நூல் (3)

அறிவியற் செய்திகளைக் கூறும் புத்தகம் பெயர்

1424 : 2, 1425 : 2, 1597 : 2, 1598 : 2, 1602 : 5, 1608 : 2

நூலானும்

புத்தகத்தாலும் பெயர் + வே.உ. + எ.உ.

1608 : 2

நூலின்

காண்க : நூல் (3) பெயர் + வே.அ.

1424 : 2

நூலே (1)

(யாப்புகளுள் ஒரு வகை) நூல் யாப்பு பெயர் + எண்.ஏ.

1339 : 1

நூலே (2)

பூணூல் பெயர் + எண்.ஏ.

1573 : 1

நூலே (3)

இலக்கணம் பெயர் + அசை

1614 : 28

நூழிலும்

தும்பைத்திணைப் புறத்துறைகளுள் ஒன்று, அது வீரனொருவன் போரில் பகைவர் பலரைக் கொன்று குவித்த சிறப்பைக் கூறுதல்.
இ.க.சொ.,பெயர் + எ.உ.

1022 : 17

நூற்பால்

இலக்கணத்தின்கண் பெயர் + வே..உ.

1473 : 3

நூறாயிரம்

நூறாயிரம் என்னும் சொல் (ஒரு இலட்சம்) பெயர்

472 : 1

நூறு (1)

நூறு என்னும் சொல் பெயர்

393 : 1, 461 : 1, 464 : 3, 472 : 2, 473 : 1

நூறு (2)

நூறாகிய எண் இ.பெ.ஒ.அ.

1073 : 1

நூன்மரபு

இலக்கணத்தின் மரபு பற்றிய பெயர் கூறும் நூற்பகுதி, எழுத்ததிகாரத்தின் முதல் பிரிவின் தலைப்பு. இ.க.சொ., பெயர்

நெக

நெகிழும்படி வி.எ.

1064 : 27

நெஞ்சம் (1)

அன்பு ஆ.பெ.

1097 : 13

நெஞ்சம் (2)

உள்ளம் பெயர்

990 : 4, 5, 1063 : 3, 1097 : 21

நெஞ்சமொடு

உள்ளத்தோடு பெயர் + வே.உ.

990 : 4, 5, 1063 : 3, 1097 : 21

நெஞ்சழிதல்

காதல்மெய்ப்பாடுகளுள் ஒன்று, அது பிரிவாற்றாத தலைவி, தலைவன் மேல் அன்பு இல்லாதவள் போல அறத்தினை அழித்துக் கூறிய போது (ஆங்கு) அதற்காக வருந்துதல். இ.க.சொ., பெயர்

1219 : 8

நெஞ்சினும்

மார்பிலும் பெயர் + வே.அ. + எ.உ.

83 : 2

நெஞ்சு (1)

மார்பு பெயர்.

83 : 2

நெஞ்சு (2)

உள்ளம் பெயர்

989 : 6, 1057 : 10, 1065 : 10, 1096 : 2, 1097 : 9, 1196 : 6

நெஞ்சே

உள்ளமே பெயர் + எண்.ஏ.

1459 : 3

நெஞ்சொடு

உள்ளத்தொடு பெயர் + வே.உ.

1146 : 5

நெஞ்சோடு

உள்ளத்தோடு — பெயர் + வே.உ.

1153 : 1

நெட்டெழுத்திம்பர்

நெடிலின்பின் — பெயர் + வே.உ.

41 : 1, 197 : 1

நெட்டெழுத்திம்பரும்

நெடிலின்பின்னரும் — பெயர் + வே.உ. + எண்.உ.

36 : 1

நெட்டெழுத்து

நெடில் எழுத்து — பெயர்

4 : 4, 43 : 1, 50 : 2, 136 : 2, 1479 : 1

நெடிது

நெட்டெழுத்து (நெடில்) — பெயர்

632 : 1

நெடியதன்

நெட்டெழுத்தின் — பெயர் + வே.உ.

371 : 1, 401 : 1

நெடியதன் முன்னர்

நெடிலெழுத்தின் முன் — பெயர் + சா + வே.உ

161 : 1

நெடியவும்

நெடில் எழுத்துகளும் — பெயர் + எண்.உ.

1481 : 2

நெடில்

இரண்டுமாத்திரையாய் ஒலிக்கின்ற நெட்டெழுத்து — இ.க.சொ., பெயர்

1265 : 1

நெடிலடி

ஐந்து சீர்களானியன்ற செய்யுளடி, பதினைந்து முதல் பதினேழு வரையான எழுத்துக்களைப் பெற்ற அடி எனலும் ஒன்று. — இ.க.சொ., பெயர்

1300 : 1, 1319 : 2

நெடிலடிக்கு

காண்க : நெடிலடி — பெயர் + வே.உ.

1300 : 1

நெடிலடியும்

ஐந்து சீர்களால் இயன்ற செய்யுளடியும் — பெயர் + மு.உ.

1319 : 2

நெடிலே

நெட்டெழுத்தே — பெயர் + எண்.ஏ.

1265 : 1

நெடு

நீண்ட — பெஅ.அ.

44 : 1*, 162 : 4, 180 : 1*, 189 : 5, 390 : 2, 393 : 2*,

* இம்மூவிடங்களிலும் நெடும் எனவும் கொள்ளலாம்.

நெடுஞ்சீர்வண்ணம்

நெட்டுழுத்துக்கள் மிக அதிகமாகப் பயின்று வருவதால் உண்டாகும் செய்யுளோசை — இ.க.சொ., பெயர்

1472 : 5, 1479 : 1

நெடுந்தகை

நெடுந்தகை என்னும் சொல் (தக்கோன்) — பெயர்

1576 : 2

நெடும்

நீண்ட — பெ.அ.

56 : 2 (180 : 1, 393 : 2, 441 : 1)

நெடுமுதல்

ஒரு சொல்லில் முதலெழுத்தாக வரும் நெடில் — பெ.அ.அ. + ஆ.பெ.

162 : 4, 180 : 1, 189 : 5, 390 : 2, 393 : 2, 441 : 1

நெடுமையும்

நீட்டமும் — பெயர் + எண்.உ.

50 : 1, 801 : 2

நெடுமொழி (1)

வெட்சித்திணையின் புறனடையாக அமையும் துறைகளுள் ஒன்று — இ.க.சொ., பெயர்

1010 : 13

நெடுமொழி (2)

வஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று. அதாவது புகழ்ச்சொல். மாராயமாகிய உவகை பெற்ற நெடியமொழி. (இளம்.) வேந்தனால் சிறப்புப்பெற்ற வீரன் தானே புகழ்ந்துரைத்தல், அல்லது பிறிதொருவர் அவ்வீரனைப் புகழ்தல் (நச்சர்) — இ.க.சொ. பெயர்

1013 : 5

நெடுமொழியானும்

புகழ்ச்சொல்லும் — பெயர் + சா + எண்.உ.

1013 : 5

நெடுவெண்பாட்டே (1)

ஆறடி முதல் பன்னிரண்டடிவரை பெறும் வெண்பா. — பெயர் + எண்.ஏ.

1378 : 1

நெடுவெண்பாட்டே (2)

காண்க : நெடுவெண்பாட்டு — பெயர் + அசை

1417 : 1

நெய்

எண்ணெய் — பெயர்

1096 : 28, 1097 : 8

நெய்தல்

அகத்திணையாகிய நெய்தல்; இதன் முதல் பொருளாவது கடலும், கடல் சார்ந்த இடமும் ஆகும். — இ.க.சொ., பெயர்

952 : 5, 957 : 2

நெய்தலது

அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று, அது இரங்கலையும் இரங்கல் நிமித்தத்தையும் தன் உரிப்பொருளாகப் பெற்றது. — இ.க.சொ., பெயர் + வே.உ.

1019 : 1

நெய்யணி

(குழந்தை பிறந்த பத்து நாள் கழித்துத் தாய்க்கு) எண்ணெய் தேய்த்து நீராட்டல். — வே.தொ.

1096 : 28, 1097 : 8

நெருங்கி

அழுத்தமாகச் சொல்லி — வி.எ.

989 : 8, 1097 : 29, 1100 : 8

நெருங்கினும்

காண்க நெருங்கி — வி.எ. + எண்.உ.

1097 : 24

நெல்

நெல் (தானியம்) — பெயர்

372 : 1, 1527 : 1

நெல்லும் (1)

நெல் என்னும் சொல்லும் — பெயர் + எண்.உ.

372 : 1

நெல்லும் (2)

நெற்பயிரும் — பெயர் + எண்.உ.

1527 : 1

நெறி (1)

மரபு — பெயர்

104 : 3, 161 : 3, 587 : 1, 590 : 2, 596 : 9, 933 : 3, 947 : 3, 1003 : 2, 1061 : 16, 1064 : 23, 1195 : 2, 1324 : 2, 1380 : 2, 1446 : 2, 1449 : 5, 1464 : 1, 1497 : 3, 1593 : 3

நெறி (2)

வகை — பெயர்

1015 : 2, 1348 : 2, 1430 : 1

நெறி (3)

வழி — பெயர்

1096 : 5, 1444 : 2, 1460 : 1, 1467 : 2

நெறித்து

இலக்கணத்தை உடையது — கு.வி.மு.

1606 : 4

நெறித்தே

இலக்கணத்தை உடையது, தன்மையை உடையது — கு.வி.மு. + அசை

958 : 2, 1028 : 2

நெறிப்பட்டு

வழிப்பட்டு — வி.எ.

1460 : 1

நெறிப்பட

முறையாக — வி.எ.

83 : 5, 4383 : 3, 688 : 1766 : 6, 914 : 4, 1058 : 4

நெறிப்படு

வழக்கியற்படுகின்ற — வி.தொ.அ.

1061 : 16

நெறிப்படுத்தினரே

முறைப்படுத்தினர் — வி.மு. + அசை

1529 : 7

நெறிப்பாடு

